பக்கங்கள்
24

# புதுவிதி

PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 04 நவம்பர் 2017 விதி : 73




நீந்திக் கடந்த
நெருப்பாறு





தமிழ் இருக்கைக்காகவும்
போராடுவோம்



புலி பாய்ந்த
தவளைப் பாய்ச்சல்



நிலாவரை




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



நடிகராக முன்னர் இயக்குநர் மணிரத்தினத்திடம் உதவி இயக்குநராக இருந்தவர் சித்தார்த். நடிகரான பின் முழுக்க முழுக்க நடிப்பிலேயே கவனம் செலுத்தினார்.

இப்போது நண்பர் மிலிண்ட் ராவுடன் சேர்ந்து பேய்ப் படம் ஒன்றை உருவாக்குகிறார். திரைக் கதையை சித்தார்த்தே எழுதி இருந்தார்.

'அவள்' எனப் பெயரிட்டிருக்கும் இந்தப் படத்தில் நாயகியாக ஆண்ட்ரியா நடித்துள்ளார். இந்த வாரம் படம் வெளியாகிறது.

சுசீந்திரன் இயக்கத்தில் சந்தீப் கிஷன், விக்ராந்த், மெஹ்ரின், சூரி நடித்துள்ள படம் நெஞ்சில் துணிவிருந்தால். பஞ்சாப்பை சேர்ந்த மெஹ்ரின் இந்தப் படம் மூலம் நாயகியாக தமிழில் அறிமுகமாகிறார். இந்தப் படத்தில் மற்றவர்களைக் கலாய்க்கும் பெண்ணாக நடிக்கிறேன். இந்தப் பாத்திரம் போன்றே நிஜத்திலும் நான். அதனால் கதாபாத்திரத்தை நடிப்பின்றி நிஜமாகவே செய்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

பிரியா
வரவே
முக்கிய
செய்
கார்த்தி
பவா




# தலைவனின் தம்பி தமிழ்ச்செல்வன்

தமிழர் போரியல் வரலாற்றில் போர் வீரன் - தலைவனின் பாதுகாவலன் - போர்த் தளபதி - அரசியல்துறை தலைவர்- இராஜதந்திரி எனப் பல்பரிமாணங்களில் ஜொலித்தவர் சு.ப.தமிழ்ச்செல்வன். மனிதர்களை எடை போடுவதிலும், அவர்களை இலகுவாகக் கையாள்வதிலும் இயற்கையாகவே பேராற்றல் பெற்றிருந்தார். இந்தப் பேராற்றலுடன் சமயோசித அறிவும், துரிதமாக முடிவெடுக்கும் ஆற்றலும் மக்களுடன் நெருங்கிப் பழகும் இயல்பும்தான் அவரை அரசியல்துறை தலைவனாக- இராஜதந்திரியாக உருவெடுக்க - அடையாளம் காண உதவின.

யாழ்ப்பாணம் - தென்மராட்சியை சேர்ந்த பரமு - விசாலாட்சி தம்பதியரின் கடைசிப் புதல்வனாக 1967 ஒகஸ்ட் 29 அன்று பிறந்தார் தமிழ்ச்செல்வன், பெற்றோர் இட்ட பெயர் இதுவே. தமிழின் புதல்வனாக அவர் அவதரித்த காலப்பகுதிதான், ஈழத் தமிழரின் உரிமைக்காக இளைஞர்கள் ஆயுத வழிப் போராட்டத்தின் மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கியிருந்தனர். அக்கால கட்டத்தில் பிறந்த தமிழ்ச்செல்வனும் இயல்பாகவே உரிமைப் போராட்டத்தின் மீது ஈர்ப்பும் - ஆயுத வழியில் நம்பிக்கையும் கொண்டார்.

தனது பதினேழாவது வயதில் - 1984 இல் போராளியாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்தார். தினேஷ் என்ற இயக்கப் பெயர் சூடிக் கொண்டார். இந்தியாவில் - பொன்னம்மானிடம் பயிற்சி பெற்றவரை இனங்காட்டியது அவரின் சூட்டுத்திறன்தான். பயிற்சியில் இறுக்கம் காட்டும் பொன்னம்மான், தினேஷுக்கு ஒரு ரவையை சுடக் கொடுத்தார். அவரின் சூடு சரியாக மையப்புள்ளியைத் தாக்கியது. குருட்டாம்போக்கில் பட்டதாக இருக்கலாம் என்ற எண்ணத்தில், சோதிக்கும் நோக்கில் மற்றொரு ரவையைக் கொடுத்தார். அதுவும் மையப் பகுதியை விட்டு விலகவில்லை. இப்படியே சில ரவைகள் கைமாறப்பட்டன. ஒவ்வொன்றும் மையப் பகுதியில் தைத்தன. தினேஸின் திறமையை அறிந்து கொண்ட பொன்னம்மான் 'இனி உனக்கு ரவை இல்லை ஓடடா..." எனச் செல்லமாக விரட்டினார்.

இந்த சூட்டுத்திறன்தான் பின்னாளில் இம்ரான் - பாண்டியனின் அணியில் ஒருவராகி தலைவரின் பாதுகாவலர் களில் ஒருவராக்கியது. இந்தியாவில் தலைவரின் பணிகளை செய்து வந்தவர், யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவம் புலிகளை அழிக்கத் தேடியபோது தலைவரின் மனைவியையும் இரு குழந்தைகளின் பாதுகாவலராக இருந்து பத்திரமாக வன்னிக்கும் அனுப்பி வைத்தார். மேஜர் கேடில்ஸின் எதிர்பாராத வீரச்சாவைத் தொடர்ந்து தென்மராட்சிப் பகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பொதுமக்களுடன் நெருக்கமான உறவைப் பேணிய தினேஸை மக்கள் பாதுகாத்து வந்தார்கள். அவரின் பெரும்பாலான உணவு மக்களின் வீட்டில் - ஏழைகளின் வீட்டிலாகத்தான் இருக்கும்.

தமிழ்ச்செல்வனின் தோற்றம் ஒரு பெருவீரனுக்குரியதல்ல. கட்டையான மெல்லிய உருவம். ஆனால் அவரை இந்திய இராணுவம் அவரைத் தேடிய நாள்களில் தினேஸ் என்றால் பெரும் தளபதி என்றே நினைத்திருந்தார்கள். ஆனால் எந்நேரமும் புன்னகையுடன் தம்மைக் கடந்து செல்பவன்தான் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. என்பதை விட தன்னைப் பற்றிய விம்பத்தை பெரிதாக்கி உலவச் செய்தது தினேஸின் தந்திரம்தான் என்பதை இந்திய இராணுவம் அறியவில்லை என்பதே பொருந்தும். இந்திய இராணுவம் ஒருமுறை புலிகளின் ஒரு அணியை எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஆனால் போருக்கான ஆயத்ததுடன்- நிலையில் இராணுவ அணி இருக்கவில்லை. தவிர அது தீவிர போர் காலமாகவும் இருக்கவில்லை. எனவே போரை தவிர்க்க விரும்பிய இந்திய அணியின் பொறுப்பாளர் 'உங்களின் பொறுப்பாளர் தினேஸி டம் பேச வேண்டும்" என்று தினேஸி டம் கேட்டார். அதற்கு தினேஸ் 'தினேஸ் பல நூறு போராளிகளுடன் வேறிடத்தில் நிற்கிறார். அவரிடம் கூறவேண்டியவற்றை என்னிடம் சொல்லுங்கள். நான் அவருக்கு தெரிவிக்கிறேன்" என்று கூறினார் என தமிழ்ச்செல்வன் பற்றிய நினைவுகளை கு.கவியழகன் என்ற போராளி பகிர்ந்திருந்தார்.

நுணுக்கமான அறிவு - நகைச்சுவை இழையோடும் பேச்சு - சிரித்தே எதிராளர்களை மடக்கும் தந்திரம் என்பவற்றை ஆயுதமாகக் கொண்டு நின்ற தினேஷ் 'தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் படுகாயமடைந்தார்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)

தமிழரசன்



# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

1




## கள்ளுக்குத் தடை

பனை, தென்னையில் இருந்து கள் இறக்குவதற்கு அனுமதி பெற வேண்டும் என்ற அறிவித்தல்தான் கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் சூடு பிடித்திருந்தது. பொங்கி எழுந்துவிட்டார்கள் நம் போராளிகள். பிறகென்ன வழமைபோல "பண்டைக் காலம் முதல் பழந்தமிழரின் சொத்து கள்ளு" என முகப்புப் படத்தை மாற்றி போராட்டம் செய்தார்கள்.

கள்ளு தொடர்பான தகவல்களை எல்லாம் தேடி எடுத்து தங்கள் சுவர்களை நிறைத்தார்கள். கித்துளில் இருந்து இறக்கப்படும் கள்ளுக்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லையாம் பனை, தென்னையில் இருந்து இறக்கும் கள்ளுக்குத்தான் அனுமதி தேவையோ என்று வசனங்கள் பேசினார்கள்...

ஆக முகப்புத்தகத்தில் பொங்கிப் பிரவாகித்தவர்கள் தமிழ்ச்செல்வனின் நினைவுநாள் வந்ததும் அதை அப்படியே விட்டுவிட்டு, அவர் பற்றிப் பேச எழுத ஆரம்பித்தார்கள்.

2



## தமிழ்ச்செல்வன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைவர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் பத்தாம் ஆண்டு நினைவுதினம் கடந்த வாரம் வந்தது.

முகப்புத்தகமே அவரின் நினைவில் மூழ்கியது. நித்தியப் புன்னகை அழகனின் சிரித்த முகமே எங்கும் நிறைந்திருந்தது. தமிழ்ச் செல்வன் பற்றிய நினைவுக் குறிப்புகள், தகவல்கள் பல முகப்புத்தகத்தை நிறைத்திருந்தன.

தமிழ்த் தேசிய உணர்வை எம்மிடம் இருந்து அகற்றி விட எதனாலும் முடியாது என்பதை சொல்வதாக கடந்த வாரம் அமைந்திருந்தது.

3



## கார்த்திகை

கார்த்திகை என்றாலே துள்ளிக் குதித்து மகிழ்வதாக எமக்காக உயிர்நீத்தோரை வணங்கும் மாதமாக தமிழர்கள் கொண்டாடுகிறார்கள். 2017 கார்த்திகையை வரவேற்பதாக மழையும் கூடவே பூக்கத் தொடங்கும் கார்த்திகை மலர்களின் படங்களும் சமூகவலைத்தளங்களை நிறைத்தன.

தலைவர் பிரபாகரன், தமிழ்ச்செல்வன், கார்த்திகைப் பூ, புலிக்கொடி, மஞ்சள், சிவப்பு வர்ண கீலங்கள் என்பன கார்த்திகையை வரவேற்றன. கூடவே கார்த்திகை பற்றிய கவிதைகள், மாவீரர் நினைவுப் பகிர்வுகள் பற்றியும் அவை பேசத் தவறவில்லை. கார்த்திகைப் பூக்களை வணங்கி - வரவேற்றன சமூகவலைத்தளங்களின் கார்த்திகைப் பூக்கள்.

---

இந்தியாவில் கோயில் கோயிலாக சென்று

**பிச்சை எடுத்து வாழப்போகிறேன்**

ரஷ்ய இளைஞர் பிடிவாதம்





நாட்டு நடப்ப பாத்தா நாங்களும் அங்கதான் வரனும் போல... இதுக்கும் நீங்க போட்டியாடா...

---

**ஜோசியரே... பொண்டாட்டி கிட்ட அடிக்கடி நிறைய திட்டு வாங்கறேன். இப்படி திட்டு வாங்காம இருக்க எதாவது பரிகாரம் இருக்கா..?**

**இருக்கே.....!**

**என்ன பரிகாரம்! என்ன பரிகாரம்!**




**அதுக்கு நீங்க தாலி கட்டாம இருந்திருக்கனும்.....!**

---

**டேய் முதல் மாசம் ஜனவரி, ரெண்டாவது மாசம் பிப்ரவரி, அப்ப பத்தாவது மாசம்?**




**டெலிவரி சார்.**

---

**ராவணன்: ஏண்டா ஒவ்வொரு தசராவுக்கும் என் உருவபொம்மைய கொளுத்துறீங்களே, நான் என்ன உங்க பொண்டாட்டியவாடா தூக்கிட்டு போனேன் ?"**

#படித்ததில் பிடித்தது

**ஒருவர்: ஏன் தூக்கிட்டு போகலைன்னுதாண்டா கொளுத்துறோம்...!**

சிரிக்க மட்டுமே!

---

**கணவன்: மழை ரொம்ப பெய்யுது ஆபீஸ் போலாமா வேணாமா?**




**மனைவி: சும்மா இருக்குறதுக்கு எங்க இருந்தா என்ன!**

---

70 வயசு பெரியவர் தன்னோட மனைவியை இன்னமும் 'Darling'. 'Honey'. 'Sweet heart'ன்னு கூப்ட்டுக்கிட்டிருந்தாரு.

அத பாத்து நான் அவரு கிட்ட கேட்டேன்..... "ஏங்கய்யா, எப்படி இந்த வயசுல கூட பொண்டாட்டிய இவ்வளவு பாசமா கூப்புடுறீங்க..??"

"தம்பி, அவ பேரு பத்து வருஷத்துக்கு முன்னாடியே மறந்து போச்சு! அவ கிட்ட பேர கேக்க பயமா இருக்கு!"

10:48 A.M.

---

நீதிபதி:
"நீங்க ரொம்ப வேகமா வண்டி ஓட்டினீங்களா?"

குற்றவாளி:
"ஐயா! நான் என் பொண்டாட்டிய கூட்டிட்டு வர மாமனாரு வீட்டுக்கு போய்கிட்டு இருந்தேன்யா!! நீங்களே சொல்லுங்கய்யா எவனாவது பொண்டாட்டிய வீட்டுக்கு கூட்டிட்டு வர வேகமா போவானா?"

நீதிபதி: "கேஸ் டிஸ்மிஸ்ட்."

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# தலைகுனிந்து நிற்கிறோம் விக்னேஸ்வரனே உம்மால்

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆர். விக்னேஸ்வரனின் நடவடிக்கையாலும் - பேச்சாலும் எம் இனமே தலைகுனிந்து நிற்கின்றது. எதிரிக்கு தலைவணங்கிடாத பண்டார வன்னியன், தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் என எம் இனம் பெருமை பெற்ற மனிதர்களின் காலத்தில்தான் காக்கை வன்னியன், அ.அமிர்தலிங்கம், கருணா, டக்ளஸ் என்ற சிறுமைத் தனம் உடையவர்களும் வாழ்ந்தனர் - வாழ்கின்றனர். ஆனால் துணைவேந்தரே, நீங்கள் பெருமை மிக்க மனிதர்களின் வழி சேராது சிறுமை மனிதர்களின் அணி சேர்ந்து, இன மானத்தையும், யாழ். பல்கலைக்கழகத்தின் சிறப்பையும் மங்கச் செய்திருக்கிறீர்கள்.

தாங்கள் துணைவேந்தராக இருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். எம் இனத்திற்கான விடுதலை தீ மூட்டப்பட்டதில் பல்கலைக்கழகத்தின் பங்கு எத்தகையது என்பதை. ஆனால் இதை நீங்கள் அறியாது இருக்க மாட்டீர்கள். மருத்துவராக, பேராசிரியராக இன்னும் பிற உயர் பதவிகளில் தங்கள் பிள்ளைகள் இருப்பர் என்ற கற்பனையில் பெற்றோர் மூழ்கிக் கிடக்க, அந்தப் பிள்ளைகளோ சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காக ஆயுதம் ஏந்தி, எதிரிகளை வீழ்த்தி சாக்களம் புகுந்தனர். அத்தகைய உத்தமர்களின் தியாகத்தில் கட்டமைக்கப்பட்டதுதான் யாழ். பல்கலைக்கழகம்.

இத்தகைய புனிதம் பொருந்திய பல்கலைக்கழகத்தின் உயர் பதவியில் இருந்து கொண்டு, தங்கள் இனத்திற்காக - உறவுகளுக்காக மாணவர்கள் நடத்தும் போராட்டத்தை நசுக்க முற்படுவது எந்தவிதத்தில் நியாயம்? மாணவர்கள் போராடுவது தாங்களும் பிரதிநிதித்துவம் செய்யும் இனத்தின் - உறவுகளின் விடுதலையை வலியுறுத்தித்தானே. மாணவர்களுக்கு உற்சாகம் கொடுத்து போராட்டத்தை வலிமைப்படுத்த வேண்டிய நீங்கள் இதைப் புரிந்து கொள்ள மறுப்பது ஏன்? சரி... அப்படி போராட்டத்தைத் தட்டிக் கொடுத்து வலிமைப்படுத்தாது விடினும் பரவாயில்லை. போராட்டத்தை அடக்குமுறைக்கு உள்ளாக்கி அதை நசுக்கி விடத் துடிப்பது எதற்காக?

விசாரணைகள் இன்றியும் - இனச் சாயம் பூசிய நீதியில் நம்பிக்கை இன்றியும் சிறைகளில் வாடிக் கிடக்கும் எம் உறவுகளான அரசியல் கைதிகள், தங்களின் விடுதலைக்கு நம்பும் ஒரே மார்க்கமாக இப்போது இருப்பது மாணவர்களையும் அவர்களின் போராட்டத்தையுமே. அவர்களின் நம்பிக்கையை சிதைக்காது தங்களின் உறவுகளின் விடுதலைக்காக குரல் கொடுப்போரை நசுக்கிவிடத் துடிப்பதுடன் மட்டும் நில்லாது அவர்களின் போராட்டம் தோல்வியில் முடியும் என்று சீறியிருப்பதை எப்படிப் பொறுக்க முடியும். விக்னேஸ்வரன் என்ற பெயரை மட்டும் கொண்டு எல்லோரும் விக்னேஸ்வரன் ஆகிவிட முடியாது என்பதை தாங்களின் அபசகுணப் பேச்சு எம் இனத்திற்கு உணர்த்தியுள்ளது.

புதிய துணைவேந்தராக தாங்கள் பொறுப்பேற்றபோது... 'இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அடக்குமுறைக்கும் - இனத் துரோக அரசியலுக்கும் இடமிருக்காது" என்று உறுதியாக நம்பினோம். ஆனால் அந்த நம்பிக்கையை இப்போது நீங்களே உடைத்து விட்டீர்கள். இரண்டாவது இடத்தில் இருந்த தாங்கள் துணைவேந்தரானது குறித்து பலரும் பலவிதமாகப் பேசினாலும் - கருதினாலும், தாங்கள் வழிவந்த மண்ணின் சிறப்பு ஒருக்காலும் பிழைக்காது என்று நாம் முன்னர் கூறியிருந்தோம். ஆனால் அந்த மமகாயம் முன்னரே உங்களுக்கும் முன்னைய துணை வேந்தருக்கும் வேறுபாடு இல்லை என்பதை உணர்த்தி விட்டீர்கள். தங்களின் தெரிவிலும் இனத்துரோகமும் - அரசியலும் - பதவி வெறி ஆசையும் இருந்திருக்குமா என்று கருதவும் இடம் ஏற்படுத்தி விட்டீர்கள்.

மாணவர்களின் போராட்டத்தை மட்டுமில்லை எத்தகைய மக்கள் போராட்டத்தையும் அதிகாரத்தாலும் அடக்குமுறையாலும் அடக்கி விட முடியாது. மாறாக அது அவர்களிடையே ஓர்மத்தையே ஏற்படுத்தும். மாணவர்களின் போராட்டம் வெற்றி பெற வாழ்த்துகிறோம். அதற்கு முன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எங்கள் முப்பாட்டன் திருவள்ளுவரின் குறள் ஒன்றை நினைவுபடுத்துகிறோம். அதன் பொருளை தாங்கள் அறிவீர்கள் என்ற நம்பிக்கையுடன்...

**'பிறர் நாணத் தக்கது தான் நாணா னாயின்**
**அறம் நாணத் தக்கது உடைத்து"**

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தமிழ் இருப்புக்காக போராடுவோரே இருக்கைக்கும் போராடுங்கள்

அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கான தீவிர முயற்சிகளை எமது அயல்நாடான இந்தியாவின் தமிழ்நாடு முன்னெடுத்து வருகின்றது. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவத்தையும் தமிழ் இருக்கைக்கான முயற்சி எப்படி தொடங்கப்பட்டது என்பதையும் அறிவோம்.
உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் மூன்றாவது இடத்தில் ஹார்வார்ட் பல்கலைக்கழகம் உள்ளது. 400 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகத்தில் உலகின் முக்கிய தலைவர்கள் படித்துள்ளனர். இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் 47 பேர் இங்கு படித்தவர்கள். 32 பேர் பிரதமர்களாக பிற்காலத்தில் உருவாகியுள்ளனர். புலிட்சர் பரிசு வாங்கிவர்களில் 48 பேர் இங்கு படித்தவர்களே. தன் மாணவர்களுக்காக உலகின் மிகச் சிறந்த நூலகத்தைக் கொண்டுள்ளது இந்த ஹார்வர்ட் பல்கலைக்கழகம். கிட்டதட்ட 35 லட்சம் புத்தகங்கள் கொண்ட 73 நூலகங்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் தற்போது தொடக்க நிலை, நடுநிலை மற்றும் முன்னேறிய நிலை ஆகிய பிரிவுகளின் கீழ் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இருந்தபோதிலும் இங்கு தமிழுக்கு என்று இருக்கை அமையும்போது அதற்கென துறை உருவாகும், துறைத்தலைவர், பேராசிரியர் போன்றவர்களைப் பணியமர்த்துவார்கள். தற்போது தன்னார்வமாக 20 மாணவர்கள் தமிழ் படித்து வருகிறார்கள். அது பலநூறாகப் பெருகும். தமிழ் படித்த சான்றோர்கள் தங்களது ஆய்வறிக்கையை அங்கு வழங்கி பட்டம் பெறலாம்.




இப்படிப் பலபல விடயங்கள் உள்ளன. உலகில் கிட்டதட்ட 7,000 மொழிகள் உள்ளன. அதில் சீனம், கிரேக்கம், லத்தின், ஹீப்ரு, தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பெர்சிய மொழி ஆகியவை 'கிளாசிக்கல்' என்று சொல்லக்கூடிய உயர்தனிச் செம்மொழிகளாக உள்ளன. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மொழிகளுக்கு தகுதிகள் உண்டு. அவை, பழந்தன்மை, சார்பற்ற தனித்தன்மை, பல்வேறு வழக்குகள் இருந்தாலும் பொதுவான எழுத்துகள், சார்பற்று இருத்தல், பன்மொழிகளைப் பிறப்புவிற்பதற்கான தாய்மைத்துவம், பண்பாட்டு கலைத் தன்மை, விடுதலை, இலக்கிய வளம், மேன்மைமிகு மேற்கோள்களும் சிந்தனை வளம், எனப் பதினொரு வகை தகுதிகளில் அனைத்தையும் கொண்டிருப்பது தமிழ் மட்டுமே ஆகும்.

ஆனால், மிக அதிக மக்கள் தொகை கொண்ட சீனமும் அங்கு இருக்கை கொண்டுள்ளது. மிகக்குறைவான மக்களால் பேசப்படும் ஹீப்ருவும் தனக்கென தனி இருக்கை கொண்டுள்ளது. இவ்வளவு ஏன் சொற்ப நபர்களே பேசும் சமஸ்கிருதம் கூட இந்திய அரசின் ஆதரவுடன் தனி இருக்கையைப் பெற்றுள்ளது. ஆனால், தமிழ் அங்கு வெறும் இருபது பேர் மட்டும் படிக்கும் மொழியாக உள்ளது.
உலகின் மூத்த பல்கலைக்கழகத்தில் உலகின் மூத்த மொழியான தமிழ் இடம் பெறாமல் இருப்பது பலருக்கும் ஒரு குறையாக இருந்தது.

அமெரிக்காவில் வசிக்கும் வைதேகி ஹெர்பர்ட் சங்கத்த மிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவருக்கு நடந்த பாராட்டுவிழாவில் கலந்துகொண்டு, அவரைச் சந்தித்தபோது மருத்துவர் விஜய் ஜானகிராமன் அறிமுகமானார். அந்தச் சந்திப்புதான் இன்று ஹார்வர்ட் பல்கலையில் தமிழ் இருக்கை உருவாக்க நடக்கும் நிகழ்வின் தொடக்கப் புள்ளி. இதுகுறித்து எழுத்தாளர் அ.முத்துலிங்கம் குறிப்பிடுகையில்... 'வைதேகி ஹெர்பெர்ட்' என்ற அமெரிக்கர், தமிழ்ச் சங்க இலக்கிய நூல்கள் பதினெட்டையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். வைதேகியைப் பாராட்டிய ஒரு விழாவில், பென்சில்வேனியா வைச் சேர்ந்த இதய அறுவைசிகிச்சை மருத்துவர் ஜானகிராமன் அவரைச் சந்திக்க நேர்ந்தது. 2,000 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியத்தின் மன்மைக்காக, தானும் ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் அப்போது எழுந்தது. 2014-ம் ஆண்டு நவம்பர் மாதம், ஜானகிராமன் தொலைபேசியில் வைதேகியை அழைத்து... 'என் வாழ்நாளில் தமிழுக்கு ஏதாவது பெரிதாகச் செய்யவேண்டும் என நினைக்கிறேன். உங்கள் ஆலோசனை என்ன?' என்றார். வைதேகிக்கு அந்தக் கணம் மனதில் தோன்றியதைச் சொன்னார்...'உலகப் புகழ்பெற்ற ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கு இருக்கை கிடையாது. தொன்மையான தமிழ் மொழிக்கு ஓர் இருக்கை அங்கே அமையுமானால், உலகமே பயனுறும். தமிழுக்குப் பெருமை தமிழர்களுக்கும் பெருமை' என்றார்.

அதைத் தொடர்ந்து காரியங்கள் அதி விரைவாக நடந்தன. ஹார்வார்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர்களோடும் துறைத் தலைவரோடும் மருத்துவர்கள் ஜானகிராமனும், திருஞானசம்பந்தமும் பேசினார்கள்." என்று சொல்லியிருந்தார்.

உலகத்தமிழர்கள் தங்கள் பங்களிப்பை தமிழ் மொழிக்குச் செய்ய விரும்பினால் http://harvardtamilchair.org/donate என்ற தளத்தின் மூலம் செலுத்தலாம். குறைந்த பங்களிப்பாக 100 டொலர் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் தனி நபர் மட்டுமல்லாமல், கூட்டாகவோ அல்லது அமைப்புகளின் மூலமாகவோ செலுத்த முடியும்.




– நிலவன் –

# புலி பாய்ந்த தவளைப் பாய்ச்சல்

**யா**ழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் போதும் புலிகளை அழித்து விடலாம். அந்நாள்களில் இராணுவத்தின் - சிங்கள தேசத்தின் - பேரினவாத அரசின் எண்ணம் இதுவாகத்தான் இருந்தது. யாழ்ப்பாணத்தை தரைவழியில் இணைப்பதற்கு இருவழிப் பாதைகளே உள்ளன. ஒன்று ஆனையிறவு மற்றையது பூநகரி (அந்நாளில் சங்குப்பிட்டி பாலம் இல்லை. சிறிது தூரம் படகில் பயணித்தே பயணத்தைத் தொடர முடியும்) இரு தரைவழியிலும் தடைகளை ஏற்படுத்தி இராணுவம் பெரும் முகாம்களை அமைத்திருந்தது. இந்த எண்ணத்தில்தான் யாழ்ப்பாணம் மீது பொருளாதாரத் தடையையும் அரசாங்கம் விதித்தது. இதன் மூலம் மக்களை நெருக்கடிக்குள் தள்ளி - புலிகளுக்கு எதிராக மக்கள் திரும்பியதும் புலிகள் தனித்து விடுவார்கள். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு புலிகளை அழித்து விடலாம் - கூடவே தமிழரையும் என்ற கற்பனையில் மிதந்தது. இந்தக் கற்பனை நிஜமாகி இருந்தால் 2009 இல் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்டதைப் போன்றதொரு நிலை 1994 இலேயே ஏற்பட்டிருக்கும். முள்ளிவாய்க்காலையும் விட பன்மடங்கு அழிவு ஏற்பட்டிருக்கும் என்பதே உண்மை.

ஆனால் இதையெல்லாம் தகர்த்தது கிளாலி கடல் பாதை. கிளாலி கடல் நீரேரி வழியாக யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்குப் பயணித்துப் பின்னர் தாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு மக்கள் சென்றார்கள். இதேபோன்று வன்னியில் விளைவிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் கிளாலி ஊடாக வந்தன. பிற பொருட்களும் பிற வழிகளின் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. போதைப் பொருள்களின் கடத்தல் பிரதேசமாகி விட்ட யாழ்ப்பாணம் அன்று பால்மா தொடக்கம் பற்றரி வரையான முக்கிய பொருட்களை கடத்தி வரவேண்டிய இடமாக இருந்தது. எது எப்படியோ யாழ்ப்பாணம் இலகுவாக விழும் என்ற இராணுவத்தின் கற்பனையை கிளாலிக் கடல் மூழ்கடித்து விட்டது.

இதனால் கிளாலியைக் கைப்பற்றிவிடும் நோக்கில் ஆனையிறவில் இருந்து ‘யாழ்தேவி" நடவடிக்கையை இராணுவம் முன்னெடுத்தது. 1993.09.28 அன்று முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை புலிகளின் வீரத்தின் முன்னால் எடுபடவில்லை. இழப்புகளுடன் தோல்வி அடைந்து பின்வாங்கியது இராணுவம். ஆனால் இந்தக் களத்தில் பால்ராஜ் கடும் காயம் அடைந்திருந்தார். இதனால் தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் பங்கேற்க முடியவில்லை. ஆனால் மருத்துவமனையில் இருந்தவாறே, தேவையான ஆலோசனைகளை வழங்கியதுடன் புலிகளின் படையணிகளையும் ஒருங்கிணைத்திருந்தார்.



1993 மாவீரர் நாளை பெரு வெற்றி ஒன்றுடன் கடைப்பிடிக்க வேண்டும். அதுமட்டுமின்றி இரத்தவெறி பிடித்து அலைந்த கடற்படையினர் கிளாலிக் கடலால் பயணித்த அப்பாவிப் பொதுமக்களை வெட்டியும் - கொத்தியும் - சுட்டும் கொன்றனர். கடற்புலிகளின் கரும்புலிகள் அவ்வப் போது கடற்படையின் கலங்களை அழித்தாலும், மீண்டும் உயிர்க்கும் அசுரர்களாக அவர்கள் உருவெடுத்தார்கள். எனவே அவர்களுக்கு நிரந்தர முடிவு கட்ட வேண்டும் என எண்ணினார் தலைவர் பிரபாகரன். எனவே பூநகரிப் படைத் தளத்தைத் தாக்கியழிப்பதே பொருத்தம் என எண்ணினார்.

25 கிலோமீற்றர் சுற்றளவு பகுதியில் அமைந்திருந்தது பூநகரி படைத்தளம். கடற்படைத் தளமாக இருந்தாலும் அதன் முக்கியத்துவம் கருதி அது கூட்டுப் படைத்தளமாக இருந்தது. அந்நாளில் டாங்கிகள், விசைப்படகுகள் கனரக ஆயுதங்கள் எனப் பல குவிக்கப்பட்டிருந்தன. இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை லெப். ஜெனரல் சிசில் வழிநடத்திக் கொண்டிருந்தார்.

> **இரத்தவெறி பிடித்து அலைந்த கடற்படையினர் கிளாலிக் கடலால் பயணித்த அப்பாவிப் பொதுமக்களை வெட்டியும் – கொத்தியும் – சுட்டும் கொன்றனர். கடற்புலிகளின் கரும்புலிகள் அவ்வப் போது கடற்படையின் கலங்களை அழித்தாலும், மீண்டும் உயிர்க்கும் அசுரர்களாக அவர்கள் உருவெடுத்தார்கள். எனவே அவர்களுக்கு நிரந்தர முடிவு கட்ட வேண்டும் என எண்ணினார் தலைவர் பிரபாகரன். எனவே பூநகரிப் படைத் தளத்தைத் தாக்கியழிப்பதே பொருத்தம் என எண்ணினார்.**

1991 இல் ஆனையிறவு தளம் மீதான ஆகாய கடல்வெளி நடவடிக்கை தோல்வியில் முடிந்திருந்தது. எனவே பூநகரி தளம் மீதான தாக்குதலை வெற்றிகரமாக நடத்தப்பட வேண்டும் என்பதில் புலிகள் கவனமாக இருந்தனர். ஏனெனில் புலிகளின் - தமிழரின் வாழ்வா சாவா நிலையை மாற்றி எழுதக் கூடிய நிலை அன்று பூநகரி தளம் மீதான தாக்குதல் வெற்றியிலேயே தங்கியிருந்தது. தாக்குதலுக்கான வேவுத் தரவுகளை திரட்டும் பொறுப்பு சசிக்குமார் மாஸ்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரின் அணிகள் பூநகரி தளத்துக்குள் ஊடுருவி ஒவ்வொரு அங்குலமாக தகவல்களை சேகரித்தார்கள்.

இந்த வேவுப் புலிகளின் தியாகத்தை வெளிப்படுத்தும் விதமாகத்தான் ‘உறங்காத கண்மணிகள்" என்ற திரைப்படத்தை புலிகள் வெளியிட்டனர். இத்திரைப்படம் இங்கும் ஏக காலத்தில் பலாலியிலும் நடத்தப்பட்ட வேவு நடவடிக்கையையும் வெளிப்படுத்தியது. நீரிலும் நிலத்திலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதால் ‘தவளை" பாய்ச்சல் எனப் பெயரிட்டனர். இரு முனைகளில் திட்டமிடப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் (பின்னாளில் இருவரும் பிரிகேடியர்கள்)ஒவ்வொரு முனைகளில் பொறுப் பேற்றனர். கிழக்கில் நிலை கொண்டிருந்த தளபதி பானு

( 18 ஆம் பக்கம் பார்க்க)

# புதுவிதி PUTHU VITHI நடத்தும்



# பரிசு மழை போட்டி - 01 -

## முதல் சுற்றின் இரண்டாம் பரிசுக்கான வினாக்கள் - 04.11.2017

**01. தமிழீழ மாவீரர் நாள் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு எது?**

**02. இலங்கையின் உத்தியோகபூர்வ பெயர் யாது?**

**03. ஜனாதிபதியின் பதவிக் காலம் ஒரு வருடம் மட்டுமே கொண்ட நாடு எது?**

**04. அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையை வடிவமைத்தவர் யார்?**

---

01. ..............................................................

..............................................................

02. ..............................................................

..............................................................

03. ..............................................................

..............................................................

04. ..............................................................

..............................................................

**போட்டிக் கூப்பன்**

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தே.அ.அ.இல : ..............................................................

பாடசாலை : ..............................................................
(மாணவராயின்)

தொலைபேசி இல : ..............................................................

---

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 18.11.2017**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



**அனுப்ப வேண்டிய முகவரி**

**புதுவிதி**
**கரடிப்போக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

**உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்**

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 10)


## நிலாவரை

- வல்வை ரவி -



ஈழத்தில் வடபிராந்தியத்தின் புகழையும் பழம் பெருமையையும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்ற முக்கிய மையங்களில் ஒன்றாக நிலாவரைக் கிணறும் அதன் சுற்றுப் புறமும் அமைகின்றது. புத்தூர் - சுன்னாகம் இணைப்பு வீதியும் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் இராச வீதியும் சந்திக்கும் இடத்தில் சிவன் கோவில் ஒன்றும் அதன் அருகில் ஆழக் கிணறொன்றும் உள்ளது. அதுவே நிலாவரைக் கிணறாகும்.

அதாவது வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட, J/ 275 கிராம சேவகர் பிரிவுக்குள் நிலாவரைக் கிணறு அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகருக்கு வடக்குத் திசையில் 16 கிலோமீற்றர் தொலைவில், அச்சுவேலி நோக்கிச் செல்லும் இராச வீதி, புத்தூர் - பருத்தித்துறை நெடுஞ்சாலை சந்திக்கும் சந்தியில் நிலாவரைக் கிணறின் அமைவிட



முள்ளது. இக்கிணறு அமைந்துள்ள பகுதி தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்துக்குச் சொந்தமானதா கும். இதன் பராமரிப்புப் பணிகளை வலி.கிழக்கு பிரதேச சபை மேற்கொள்கின்றது. அருகிலுள்ள சிவன்கோயில்தான் தட்சிணகைலாய புராணத்தில் சொல்லப்பட்ட நவசைலேஸ்வரம் எனப் பலர் நம்புகின்றனர்.

நிலாவரை தொடர்பாக பல கர்ண பரம்பரைக் கதைகள் நிலவுகின்றன. அவையனைத்தும் இப்பகுதியின் பழைமையையும், கீர்த்தியையும் எடுத்துரைப்பவையாக அமைகின் றன. அவ்வகையில், இராமயணக் கதைத் தலைவனான இராமபிரான் இராவணனுடன் போர் புரிவதற்காக இலங்கை வந்தபோது தனது வானரப் படையினரின் தாகத்தைப் போக்குவதற்காக அம்பை ஊன்றி நீர் எடுத்த இடமே நிலாவரை என்கிறார்கள்.

நிலாவரைக் கிணற்றைப் போல பல ஆழமான வற்றாத கிணறுகள் யாழ். குடாநாட்டில் காணப்படுகின்றன. ஊரெழுவில் பொக்கணைக் கிணறு, மானிப்பாயில் இடிகுண்டுக் கிணறு, கரவெட்டியில் அத்துளுக் கிணறு, அல்வாய் மாயக்கை குளம், கீரிமலைக் கேணி, குரும்பசிட்டியில் பேய்க்கிணறு, ஊரணி வற்றாக் கிணறு போன்றன அவற்றுள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை.

இவ்வாறான கிணறுகளின் உருவாக்கம் தொடர்பில் புவியியலாளர்கள் கூறியவைகள்: 'யாழ். குடாநாடு மயோசின் காலச் சுண்ணக் கற்களாலானது. நீரைக் கசிய விடும் தன்மை இக்கற்களுக்கு உண்டு. மழைநீர் உட்கசிந்து வன்மையான பாறைகளில் தரைக் கீழ் நீராக இருக்கின்றது. மழைநீர் வளியூடாகப் பெய்யும்போது வளியி லுள்ள காபனீரொட்சைட்டுடன் கலக்கின்றது. அதனால் அம்மழைநீர் காபோனிக் அமிலமாக மாறுகின்றது. சுண்ணக் கற்களில் உள்ள கல்சியம் காபனேற்றும் காபோனிக் அமிலமும் சேர்ந்து கொள்வதால் கல் கரையும் வாய்ப்பைப் பெறுகின்றது. இதன் காரணமாக சுண்ணக் கற்பாறைகளைக் கரைத்து நீர் உட்செல்கின்றது. பாறைகள் கரையும்போது பெரிய பள்ளங்கள் ஏற்படுகின்றன. அவற்றில் பெருமளவு நீர் தேங்கி நிற்க அவையே வற்றாக் கிணறுகளாகின்றன" என்கின்றனர்.

நிலாவரைக் கிணற்றுக்குள் எலுமிச்சம் பழத்தைப் போட்டால் அதைச் சில மணி நேரத்தின் பின்னர், கீரிமலைத் தீர்த்தக் கேணியில் எடுக்கலாம் என சிறுவயதில் கேள்விப்பட்டதுண்டு. அதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதை ரோபோக்களின் ஆய்வுகள் நிருபணம் செய்கின்றன. ஏனெனில் கிணற்றிலிருந்து பல திசை நோக்கிச் செல்லும் சுரங்கப் பாதை களின் ஊடான நீரோட்டங்கள் காணப்படுகின்றன. கீரிமலைக் கேணியின் தென்கீழ் மூலையில் ஒருவர் உள்ளே நுழைந்து செல்லக் கூடிய அளவு குகை ஒன்று காணப்படுவதை இப்பொழுதும் பார்க்க முடியும். அதனூடாகவே

**கிணற்றிலிருந்து பல திசை நோக்கிச் செல்லும் சுரங்கப் பாதைகளின் ஊடான நீரோட்டங்கள் காணப்படுகின்றன. கீரிமலைக் கேணியின் தென்கீழ் மூலையில் ஒருவர் உள்ளே நுழைந்து செல்லக் கூடிய அளவு குகை ஒன்று காணப்படுவதை இப்பொழுதும் பார்க்க முடியும். அதனூடாகவே கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது. இந்தக் குகைக்கும் நிலாவரைக் கிணற்றில் ரோபோக்கள் உறுதிப் படுத்திய குகைக்கும் இடையில் நீரோட்டத் தொடர்பு இருப்பதை உய்த்தறிய முடிகின்றது**

கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது. இந்தக் குகைக்கும் நிலாவரைக் கிணற்றில் ரோபோக்கள் உறுதிப் படுத்திய குகைக்கும் இடையில் நீரோட்டத் தொடர்பு இருப்பதை உய்த்தறிய முடிகின்றது எனலாம். நிலாவரைக் கிணற்று நீர் வறட்சியின் போதும் மழைக்காலத்தின் போதும் சரி அதன் நீர் மட்டம் குறைவதோ, கூடுவதோ கிடையாது. ஏனெனில் கிணற்றுக்கு நேரடியான நிலத்தடி நீர்த் தொடர்புள்ளமையே பிரதான காரணமாகும்.

இந்நிலாவரைக் கிணற்றை ஆய்வு செய்யும் நோக்கில் பிரித்தானியா, ஜேர்மனி, செக் குடியரசு முதல- ான நாடுகள் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்- தக்கது. ஆயினும் 2016 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையின் சுழியோ- ாடிகள் ரோபோக்களின் உதவியுடன் நிலாவரைக் கிணற்றின் ஆழத்தை அறிய சகல நவீன பாதுகாப்பு நடை முறைகளையும் பின்பற்றியவாறு கிணற்றுக் குள் இறங்கி ஆய்வுகளை மேற்கொண்டனர். கிணற்றுக்குள் 55.5 மீற்றர் 182 அடி சென்றபோது கீழ் மட்டம் தென்பட்டது. சராசரியாக இரண்டு பெரிய வளர்ந்த பனை அல்லது தென்னை மரத்தின் உயரத்தை ஒத்தது இக்கிணற்றின் ஆழம். கிணற்றின் அடிப்பாகத்தில் மூன்று மாட்டு வண்டிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று முழுமையாக சிதைவுற்றிருக்க, ஏனைய இரண்டும் மாட்டு வண்டில்கள்தான் என்ற அடையாளத்தை உணர்த்துப வனவாகவுள்ளன. ஆயினும் இம்மாட்டு வண்டில்கள் எவ்வாறு கிணற்றுக்குள் வந்தனவென்பது இதுவரை அறியப்படாத புதிராகவே உள்ளது. நிலாவரையின் மேற்குப் புறமாகவுள்ளது. நவக்கிரி கிராமம். 'நிலவரை" என்பதே நிலாவரை ஆகியிருக்கலாம். வரை - மலை என்பது பொருள். அதாவது நவக்கிரி என்பதும் ஒன்பது மலைகள் என்ற பொருளைத் தருகின்றது. நவசைலேஸ்வரம் என்ற பெயரின் பொருளும் அதுவே (சைலம் - மலை). இப்பகுதி நிலங்களின் கீழ் கடுமையான கற்பாறைகள் உள்ளன. இதன் பின்னணியில் இப்பெயர்கள் உருவாகியிருக்க வாய்ப்பிருப்பதாகக் கருதுகின்றனர். இன்று பல்லின, பல்மதத்தைச் சேர்தோரது சுற்றுலா மையமாக இப்பகுதி காணப்படுகின் றது. இதனூடாக ஈழத்தின் மண் வாசனையின் அழகு நிலாவரையினூடும் வெளிப்படுத்தப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# வார பலன்

## மேடம்
சாதக, பாதக பலன்கள் கலந்தே இருக்கும், பணம் வந்தாலும் செலவும் வரும், சொத்துப் பிரச்சினைகள் தீரும், நண்பர்களுடன் விவாதங்களை தவிருங்கள்.

சிவபெருமானை வழிபடுங்கள்.

## துலாம்
எதையும் வெற்றிகரமாக செய்வீர்கள், குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு நற்செய்தி உண்டு, தந்தையின் உடல்நலனில் அக்கறை காட்டுங்கள், தொழில் சாதகமாக இருக்கும்.

பெருமாளை வழிபடுங்கள்.

## ரிஷபம்
பொன், பொருள் சேர்க்கை உண்டு, வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிட்டும், பயணங்களில் அலைச்சல் ஏற்படும், தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

ஸ்ரீராம பிரானை வழிபடுங்கள்

## விருச்சிகம்
எத்தகைய சவாலையும் சமாளிப்பீர்கள், ஆன்மிக சுற்றுலா வாய்ப்புக் கிட்டும், பணம், பொருள் வரவு உண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும், தொழிலில் சாதகமான நிலை நீடிக்கும்.

ஆண்டாளை வழிபடுங்கள்.

## மிதுனம்
அனைத்து விடயங்களிலும் நிதானம் தேவை, அலைச்சலும் உடல்நலக் குறைவும் ஏற்படும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும், கடன் வசூலாகும், புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

கருமாரி அம்மனை வழிபடுங்கள்

## தனுசு
உற்சாகமாக செயற்படுவீர்கள், சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு, மின் சாதனங்களால் செலவுண்டு, வீண் வாக்குவாதங்களை தவிருங்கள், தடைப்பட்ட விடயங்கள் சாதகமாகும்.

சரஸ்வதி தேவியை வழிபடுங்கள்

## கடகம்
மனநிறைவு இருக்கும், தீர்க்கமான முடிவுகளை எடுப்பீர்கள், ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும், புதிய பதவி கிடைக்கும், வீண் பேச்சுக்களை தவிர்க்கவும், கர்ப்பவதிகள் அதிக கவனத்துடன் இருக்கவும்

சிவலிங்கத்தை வழிபடுங்கள்

## மகரம்
தம்பதியர் இடையே நெருக்கம் அதிகரிக்கும், சொந்தங்களிடையே இருந்த மனக்கசப்புகள் நீங்கும், திடீர் பயணங்கள் ஏற்படும், பணப்புழக்கம் உண்டு, தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

பிள்ளையாரை வழிபடுங்கள்.

## சிம்மம்
ணக் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும், ணர்ச்சியில் வார்த்தைகளை விடாதீர்கள், சுப நிகழ்வுகள் நடக்கும், வேலைச் சுமை அதிகரிக்கும், உயரதிகாரிகளின் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.

சிவபெருமானை வழிபடுங்கள்.

## கும்பம்
சொத்து வாங்க, விற்க எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும், வழக்கால் தடைப்பட்ட கட்டட வேலைகள் மீண்டும் தொடங்கும், பெண்கள் விரும்பிய ஆபரணங்கள் வாங்குவர், வியாபாரத்தில் அவதானமாக இருக்கவும்.

முருகப் பெருமானை வழிபடுங்கள்.

## கன்னி
குடும்பத்தில் நடந்த பழைய விடயங்களைப் பேசாதீர்கள், சொத்து விடயங்கள் சாதகமாக அமையும், பெண்கள் விருப்பமான பொருட்களை வாங்குவீர்கள், தொழிலில் முன்னேற்றம் உண்டு.

மகாலக்ஷ்மியை வழிபடுங்கள்

## மீனம்
தடைப்பட்ட விடயங்கள் மளமளவென்று நிறைவேறும், நண்பர்கள் இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படும், பராமரிப்பு செலவுகள் உயரும், வேலைகளில் தற்காலிக இடமாற்றம் ஏற்படும்.

பத்திரகாளியை வழிபடுங்கள்.



முன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டம் அமைப்பின் வாகை சஞ்சிகையை குருமுதல்வர் வண.விக்ரர் சோசை கடந்த வாரம் வெளியிட்டு வைத்தபோது...



வேலணை மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தை ஆளுநர் றெஜினோல்ட் குரே திறந்து வைத்தபோது...





சர்வதேச சிறுவர் தின நிகழ்வு காரைநகர் பிரதேச செயலகத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றவேளை...



கொக்கிளாய் ஆற்றின் கரையோரத்தைப் பாதுகாக்க கண்டல் தாவர நடுகையில் மக்கள் ஈடுபட்டபோது...



காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி திருகோணமலை சிவன் கோயில் அருகே ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றவேளை...



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கன்னகை அம்மன் ஆலயத்தில் அம்மனைச்சுற்றி நாகம் காட்சியளித்த போது...

புதுவிதி



தொகுப்பு:
- ஏஜேஜி -

# குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com



# இளவரசியும் பதினொரு அன்னங்களும்

முன்னொரு காலத்தில் மன்னன் ஒருவனுக்கு, 11ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் இருந்தார்கள். அந்தப் பெண் பிள்ளையின் பெயர் எலிசா. பதினொரு இளவரசர்களும் பாடசாலைக்குப் போகும்போது, அவர்கள் உடையின் நெஞ்சுப் பகுதியில் ஒரு நட்சத்திரம் குத்தப்பட்டிருக்கும். வலக்கைப் பக்கம் ஒரு சிறிய வாள் தொங்கும். அவர்கள் வைரத்தாலான பென்சில்களைக் கொண்டே எழுதுவார்கள். கற்பிப்பதை வெகு சுலபமாக விளங்கிக் கொள்ளும் திறமை அவர்களுக்கு இருந்தது. மிக எளிதாக வாசிக்கக் கற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் அரச குடும்பத்தவர்கள் என்பதைக் காட்டும் வகையில், பள்ளிப் படிப்பு கவனமாகக் கையாளப்பட்டது. அவர்களின் சகோதரி எலிசாவுக்கும் அவளுடைய பாடசாலையில் இராஜ கௌரவம் தரப்பட்டதோடு, கல்வியும் சிறப்பாகத் தொடர்ந்தது.

பன்னிருவரும் மகிழ்வுடனேயே வாழ்ந்தார்கள். என்றாலும் மன்னனுக்கு வாய்த்த இரண்டாவது மனைவியிடமிருந்து, பிள்ளைகளுக்கு நல்ல அன்பு கிடைக்கவில்லை. இந்தப் பிள்ளைகளின் தாய் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்ட காரணத்தினால்தான், மன்னன் இரண்டாவது தடவையாக திருமணம் செய்திருந்தான். திருமணம் நடந்த நாளே, பிள்ளைகளுக்கு புது ராணியாரின் சுயரூபம் தெரிந்தது. திருமணக் கொண்டாட்டம் முடிந்த பின்பு அங்கு ஏராளமாக இருந்த கேக், அப்பிள் போன்றவற்றை பிள்ளைகளுக்கு கொடுக்க, ராணிக்கு விருப்பமில்லை. எதையும் கொடுக்காமல் விட்டதோடு, அந்தப் பிள்ளைகளைப் பற்றி இல்லாத பொல்லாத கதைகளை அவள் மன்னன் காதில் போட்டு பிள்ளைகள் மீது வெறுப்படைய வைத்தாள்.

முதலில் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லும் அவதூறுகளை மன்னன் நம்ப மறுத்தான். ஆனால் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமல்லவா? கெட்ட சுபாவம் கொண்ட புதுமனைவியின் துர்போதனை, சொந்தப் பிள்ளைகள் மீது நாளடைவில் வெறுப்பு ஏற்படுமளவிற்கு மாறியது.

கடைசியில் நீ விரும்பியதைச் செய்து கொள் என்று அரசன், தன் புது மனைவி தலையில் பிள்ளைகள் பொறுப்பைக் கொடுத்து விட்டான். தன் கைக்கு அதிகாரம் வந்துவிட்ட ஆணவத்தில் புது ராணி, பிள்ளைகளை மாளிகையை விட்டு துரத்த முடிவெடுத்தாள். முதலில் எலிசாவை ஒரு வறிய கிராமத்தவன் வீட்டில் வாழும்படி அனுப்பி வைத்தாள். பின்பு ஆண் பிள்ளைகளை, அன்னங்களாக மாற்றி, மாளிகையை விட்டு துரத்த முடிவெடுத்தாள். அன்னங்களாக மாறி இந்த மாளிகையை விட்டு பறந்து செல்லுங்கள் என்று கட்டளையிட்டாள். அவள் ஆசைப்பட்டது போல, 11 ஆண் பிள்ளைகளையும்அழகற்ற பறவைகளாக மாற்ற முடியவில்லை. பிள்ளைகள் அழகிய பதினொரு அன்னங்களாக உருவெடுத்து மாளிகைச் சாரளம் ஊடாக பறந்து சென்றனர். விநோத சத்தத்தை எழுப்பியபடி, பதினொரு அன்னங்களும் முதலில் மாளிகைத் தோட்டத்திற்கு மேலாகப் பறந்து, மரங்கள் அடர்ந்த ஒரு சிறு காட்டுக்குள் அமைந்திருந்த குக்கிராமத்தில் வந்திறங்கின.

அதே சமயம் பாவம் இளவரசி எலிசா தனிமையில் வாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கென்று விளையாட எந்தப் பொருட்களும் இல்லை. ஓர் இலையை கையில் வைத்துக் கொண்டு அதற்கு ஒரு துவாரம் செய்து, அதன் ஊடாக தன் அன்புச் சகோதரர்கள் தெரிகிறார்களா என்று அவள் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். வெளியில் அடித்த வெயில் அவள் முகத்தைச் சுட்டது. தான் மாளிகையை விட்டு வெளியேறிய போது தனக்கு தன் அன்புச் சகோதரர்கள் ஆசையோடு தந்த முத்தங்கள் அப்பொழுது அவள் நினைவில் வந்தன.

ஒவ்வொரு நாளும் முன்னைய நாளைப் போலவே எந்த மாற்றமும் இல்லாமல் சென்று கொண்டிருந்தமை அவளுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியது. சில நேரங்களில் அங்கே வீசும் மெல்லிய இளந்தென்றல். ரோஜாச் செடிகள் ஊடாக வந்து பூத்துக் குலுங்கிய மலர்களை வருடியபடி, உங்களை விட அழகில் சிறந்தவர்கள் இந்த உலகில் வேறு யாருமே இல்லை என்று கிசுகிசுக்கும். ஆனால் ரோஜாக்களோ தென்றல் சொல்வதை மறுத்து தலையாட்டும். எங்களை விட எலிசாதான் அழகி என்று ஒரே குரலில் எல்லாப் பூக்களும் சொல்லும். உண்மைதான். பூக்கள் கூறியது போல. எலிசா தனது பதினைந்தாவது வயதில் ஏனையோர் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு பேரழகியாக மாறியிருந்தாள்.

பாசம் பொல்லாதது அல்லவா? தன் புது மனைவியின் சொல் கேட்டு, தன் பிள்ளைகளை வெளியே விரட்டிவிட்ட அரசனுக்கு, திடீரென தன் மகளை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. தன் ஆசையை மனைவியிடம் சொல்லியும் விட்டான். ராணியும் சேவகர்களை அனுப்பி, எலிசாவை மாளிகைக்கு வரவழைத்தாள். தான் சிறு வயதில் வெளியே விரட்டியடித்த எலிசா ஒரு பேரழகியாக மாளிகை திரும்புவதைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள். எலிசா ஓர் அழகியாக வளர்ந்து விட்டதை அவளால் எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை . எலிசா மீதிருந்த வெறுப்பு அவளுக்கு அதிகரித்தது. மந்திரசக்தி கொண்ட அவளால் எலிசாவையும் அவள் சகோதரர்களைப் போல பறவைகளாக மாற்ற முடியவில்லை. காரணம் அரசன் தன் மகளை நேரில் பார்க்கவேண்டும் என்று தன் விருப்பத்தை முன்பே வெளியிட்டிருந்தான்.

(எலிசா வருவாள்)

## நீங்களும் குட்டி எழுத்தாளர் ஆகலாம்.

என் வீடு பாடசாலையிலிருந்து அதிக தூரம் இல்லை. எனவே நடந்தே நான் பாடசாலை செல்வது வழக்கம். ஐந்து நிமிட நடை போதும். சில நாட்களில் நேரம் பிந்தி விடும் என்று தோன்றினால் மிதி வண்டியில் செல்வேன். இப்படித்தான் ஒருநாள், நான் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். வழமைபோல பாடசாலை செல்வோர், வேலைக்குச் செல்வோர், பாடசாலையைத் தாண்டியுள்ள சந்தைக்குச் செல்வோர் என்று சாலை நடமாட்டம் அதிகமாக இருந்தது. திடீரென சொல்லாமல் கொள்ளாமல் வீட்டுக்கு வந்த விருந்தாளியைப் போல, அழையா விருந்தாளியாக மழை கொட்ட ஆரம்பித்தது. ஒதுங்க இடமில்லை. உடல் தெப்பமாக நனைந்து விட்டது. இன்னும் 4 நிமிட நடை தூரம் நான் போயாக வேண்டும். வீட்டுக்கு திரும்புவதானால் ஒரு நிமிடம் போதும். இன்று முதல் பாடமே பரீட்சை ஒன்றோடுதான் ஆரம்பிக்கின்றது...

உங்கள் எழுத்துத் திறமைக்கு ஒரு சவால்! பரிசும் உண்டு. கீழேயுள்ள பந்தியை நீங்கள் தொடர வேண்டும். இலக்கணப் பிழையில்லாமல் இருக்க வேண்டும். தந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி விடயத்தை நீடிக்க வேண்டும். அவ்வளவுதான். மறக்காமல் போட்டிப் பிரவேசக் கூப்பனை நிரப்பி, உங்கள் போட்டோ பிரதி ஒன்றையும் அனுப்புங்கள்.

எங்கே உங்கள் பேனாக்களை கையில் எடுங்கள் பார்க்கலாம். இனி நீங்கள்தான் எழுதி முடிக்க வேண்டும். மறக்க வேண்டாம். பரிசு உண்டு. எனவே சிறப்பாக எழுதுங்கள்.

**விண்ணப்பப் படிவம்**

முழுப்பெயர் : ..............................
பாடசாலை : ..............................
வகுப்பு : ..............................
பெற்றோர் கையொப்பம் : ....................
முகவரி : ..............................
..............................

உங்கள் கதையுடன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புக. தெரிவாகும் சிறந்த கதைக்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

## வாரம் ஒரு பழமொழி

தமிழுக்கு அழகு சேர்ப்பதில் பழமொழிக்கும் ஒரு பங்குண்டு. நீங்கள் இதை அறிந்து வைத்திருந்தால், பேச்சிலும் எழுத்திலும் என்றுமே பயன்படுத்த முடியும்.


**அம்மி மிடுக்கோ, அரைப்பவள் மிடுக்கோ?**

பொருள் :
அம்மியில் அரைப்பதன் ஆற்றல் அம்மிக்கல் -குழவியில் உள்ளதா, அரைக்கும் பெண்ணின் வலிமையில் உள்ளதா?

விளக்கம் : மிடுக்கு என்ற சொல்லை நாம் பொதுவாக இறுமாப்பு, செருக்கு என்ற பொருளில் அறிந்தாலும், அதற்கு வலிமை என்றொரு பொருளும் உண்டு. ஓர் அழகான பெண் தன் ஆற்றிலில் உள்ள கர்வம் தெரிய , முழுக் கவனத்துடன் அம்மியில் அரைப்பதை, விழுதாக அரைத்து, பாராட்டு வாங்குவதை , இந்தப் பழமொழி அழகாகச் சொல்கின்றது.

## அட அப்படியா?

ஒட்டகச்சிவிங்கிகள் வெட்ட வெளியில் நின்று கொண்டே தூங்கும் பழக்கமுடையவை. உயரமான விலங்கான ஒட்டகச்சிவிங்கி அவ்வப்போது 5 அல்லது 10 நிமிடங்களாக தினமும் ஒன்று தொடக்கம் இரண்டு மணி நேரம் மட்டுமே தூங்கும். எதிரி விலங்குகள் தாக்கி விடும் அச்சமே அவை இவ்வாறு தூங்கக் காரணமாம்.



மின்மினிப் பூச்சிகள் வண்டினத்தைச் சேர்ந்தவை. இவை பறக்கும்போது மாத்திரமே பிரகாசிக்கின்றன. தென்னாபிரிக்காவில் காணப்படும் ஓர் இன மின்மினிப் பூச்சி வெளிப்படுத்தும் ஒளியில் , ஒரு புத்தகம்கூட வாசிக்க முடியுமாம்.



# தமிழின் அழகின் கடவுள் முருகன்

முருகன் -
அழகுக் குமரன்
அவனை நாளும் தரிசிக்கக் குறையொன்றும் இல்லையே..! கந்தசஷ்டியில், 'மாறுபடு சூரர்'களை வதைத்த திருமுகத்துக்கு உரியவரான குமரனின் தரிசனம் காண்போமே... 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பார்கள்.

தெய்வம், தன்னை அன்புடன் கொண்டாடி போற்றுபவர்களுக்கு, அவர்கள் கேட்காமலேயே, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் வரமாகத் தருவது போலவே - குழந்தையும் தன்னிடம் அன்பு காட்டி கொஞ்சுபவர்க்கெல்லாம், தன்னிடமுள்ள எது ஒன்றையும் கேட்காமலேயே கொடுக்கக்கூடியது. 'இதனால் தான் குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்று கூறியிருக்கிறார்கள்.

அந்த தெய்வமே குழந்தை வடிவில் இருந்துவிட்டால்..? அங்கே அன்புக்கும் அருளுக்கும் பஞ்சமே இல்லை. அப்படிக் குழந்தை வடிவத்தில் நம்மால் கொண்டாடப்பெறும் தெய்வங்கள் சைவத்தில் சிவகுமாரனும், வைணவத்தில் வாசுதேவ குமாரனான கண்ணனுமே ஆவர்.

அழகுக்கும் தமிழுக்கும் வடிவமாகத் திகழ்பவர் முருகப் பெருமான். முருகனைக் குழந்தையாக அன்பு செலுத்தி, அவன் புகழ் பாடிப் பரவசப்பட்டவர்கள் பலர்.

அகத்தியருக்குத் தமிழ் கற்பித்த திறம் என்ன..?

பேசாப் பிள்ளையாக இருந்த குமரகுருபர குழந்தையைப் பேச வைத்து, காசியின் காற்றிலும் தமிழின் இனிமை பரவவிட்ட திறம் என்ன..? 'சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டு, தமிழ் மூதாட்டி ஔவைக்கு ஞானம் புகட்டிய திறம்தான் என்ன..? இப்படி நம் அழகன் முருகப் பெருமானின் அற்புத அருளாடல்களுக்குப் பஞ்சமே இல்லை.

பற்றுகளை அறுத்தெறிந்து, எதுவும் வேண்டாம் என்று பழநியில் ஆண்டியாக நிற்பவன் அவன்! இச்சா சக்தியான வள்ளியையும், கிரியா சக்தியான தெய்வானையையும் மணந்து, திருக்கல்யாணக் கோலத்தில் தணிகை மலையில் அருள்பவனும் அவன்தான்!

முருகன் எந்தக் கோலத்தில் இருந்தாலும், அவனைக் குழந்தையாகப் பாவித்து, பரிவுடன் அன்பு செலுத்துவதில் தமிழக மக்களுக்கு நிகர் அவர்கள்தான். தங்கள் மொழி காக்க வந்த தமிழ்க்கடவுள் என்பதால் நமக்கெல்லாம் முருகப் பெருமானிடம் அத்தனை அன்பு, பரிவு!

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் முதல், சொல்லச் சொல்ல வாய் மணக்கும் திருப்புகழ் தந்த அருணகிரிநாதர் வரை அத்தனை பேரும் முருகப் பெருமானின் அருள் திறனை அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.

முருகப் பெருமானை, நா... வடிவங்களில் வழிபடுகிறோ... நாம் எந்த வடிவில் விரும்புகிறோமோ, அந்த வடிவில் நம்மை ஆட்கொண்டு அருள்பவர் முருகக் கடவுள். சிவ ஸ்வரூபம் என்பது ஞானத்தின் வடிவம் முருகப் பெருமான் விருத்தி வடிவம். சிவ ஸ்வரூபம் என்பது ஒளிரும் ஞானம் என்றால், அந்த ஞானத்தை மற்றவர்க்கு எடுத்துக்காட்டும் ஜோதியாகத் திகழ்பவர் முருகப் பெருமான். எனவேதான், அருணகிரிநாதர் தம் திருப்புகழில், 'தீப மங்கள ஜோதி'யாக முருகப் பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார். சிவபெருமானின் ஞானக் கண்களிலிருந்து வெளிப்பட்ட ஞானச்சுடர்ப் பொறிகளிலிருந்து தோன்றியவர் குமரக் கடவுள். இதைத்தான் கந்த புராணம் அருளிய கச்சியப்பர்,



'அருவமும் உருவமுமாகி
அனாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற ஜோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய'

என்று உருகி உருகிப் பாடியிருக்கிறார். மால் மருகனின் அவதாரம் சூரர்களை சம்ஹாரம் செய்வதற்கு மட்டுமல்ல, இந்தக் கலியுகத்தில், ஆசாபாசங்களின் காரணமாக நம் மனதில் ஏற்படக் கூடிய அசுர குணங்களை எல்லாம் அகற்றி, நம்மை ஆட்கொண்டு அருள்வதற்காக ஏற்பட்ட அவதாரம்.

முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களைப் பற்றிப் பாடும் போது, முதல் வரியில் முருகனை விளையாட்டுப் பிள்ளையாக பாவித்துப் பாடுகிறார் அருணகிரிநாதர். அருணாசலத்தில் அழகன் முருகனால் ஆட்கொள்ளப்பட்ட அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாடல்களில் பக்தி மணம் கமழக் கமழப் போற்றிப் பாடியிருக்கிறார்.

முருகப் பெருமானின் ஆறுமுகங்களின் அழகை, அருளாடல்களை உணர்த்தும் அந்தப் பாடல் இதோ...

**ஏறுமயில் ஏறி விளையாடும்**
**முகம் ஒன்றே!**
**ஈசருடன் ஞானமொழி பேசும்**
**முகம் ஒன்றே!**
**கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முக**
**ஒன்றே!**
**குன்று உருவ வேல் வாங்கி நின்ற**
**முகம் ஒன்றே!**
**மாறுபடு சூரரை வதைத்த**
**முகம் ஒன்றே!**
**வள்ளியை மணம் புணர வந்த**
**முகம் ஒன்றே!**
**ஆறுமுகம் ஆன பொருள் நீ!**
**அருள வேண்டும்!**
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே**

இந்தப் பாடலில் மற்ற வரிகள் உணர்த்தும் தத்துவங்கள் எதுவும் நமக்கு வேண்டாம். மயில் ஏறி விளையாடும் குழந்தையாக நாம் குமரனை தரிசித்துக் கொண்டாடுவோம்.

அந்தக் குழந்தைக் குமரன், நாம் கேட்காமலேயே நமக்கு வேண்டியன எல்லாம் அருள்வான்!

கசுவோ சிகூரோ. 2017 ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர். யுத்தம் பற்றி இவர் எழுதிய நாவலுக்கே விருது அவருக்குக் கிடைத்தது. ஆனால் வழமையானவர் கள் போன்று போரின் வலியையும் ரணங்களையும் அவர் சொல்ல வில்லை. போரின் பின்னான களத்தையே தன் கதைக்களமாகக் கொண்டார். போரில் வென்ற தரப்பு நடந்தவற்றை மறந்து விடுமாறு பாதிக்கப்பட்ட தரப்பிடம் கேட்பது என்பது வழமையானது. ஈழப்போரிலும் 2009 இன் பின்னர் நடந்ததும் – நடப்பதும் இதுதான். எமது சூழலுக்கும் பொருந்தும் ஓர் நாவலின் ஆசிரியர் பற்றிய விவரணம் இது.



– சு. மகேந்திரின் –

# போரின் பின்னான களம்...

ஒக்ரோபர் 5 ஆம் திகதி கசுவோ இ சுகுரோ, நித்திரையிலிருந்து எழுந்தபோது, ரெலிபோன் ஒலித்தது. அவர்தான் என மறுமுனையில் உறுதி செய்யப்பட்ட பின், கிடைத்த செய்தியை அவரால் நம்பமுடிய வில்லை. உண்மைதான் 195 பேர்களில் விருதுக்காக அதுவும் நோபல் பரிசுக்காக அவர் தெரிவாகியுள்ளார் என்பதை அவரால் எப்படி நம்பமுடியும். அது மட்டுமின்றி 14 பெண்களே இதுவரை நோபல் பரிசை வென்றிருந்தனர். அதனால் இம்முறை கனடாவை சேர்ந்த மார்க்ரெட் அட்வூட்டிற்கு கிடைக்கும் என அவர் நம்பியிருந்தார்.

தவிர, இஸ்ரேலின் அமோஸ், சிரியக் கவிஞர் அன்டோனிஸ், கென்யாவின் தியன்கோ ஆகியோரின் பெயர்கள் அவரின் பெயரை விட முன்னணியில் அடிபட்டிருந்தன. அதுமட்டுமல்ல அவர் எழுதியிருப்பது வெறும் 8 நாவல்கள் மட்டுமே. இதனால் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு தனக்குக் கிடைக்கும் என்பதை அவரால் ஒருபோதும் நம்பியிருக்க முடியவில்லை. இதனால்நோபல் பரிசு கிடைத்த செய்தியை அவரால் நம்ப முடியவில்லை.

ஆனாலும் கசுவோ எழுதிய நாவல்களில் The buried giant (2015) , Never let me go, The remains of the day, Artists of the floating world ) (இரண்டாம் உலகப் போரின் பின்னான ஜப்பானின் களம்) முக்கியமானவை. இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு உள்ளாகி பேரழிவை சந்தித்த ஜப்பானின் நகரங்களில் ஒன்றான நாகசாகியில் பிறந்தவர் கசுவோ. இங்கிலாந்தின் கடல் வளத்துறையில் தந்தைக்கு வேலை கிடைத்ததால் அவரின் ஐந்து வயதிலேயே இங்கிலாந்தில் குடியேறினார்.

எழுத்துத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர், சில காலம் இசைத் துறையிலும் ஈடுபட்டார். நான்கு முறை 'மான்புக்கர்' பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டவர். தி றிமெயின்ட் ஒவ் த டே என்ற இவரது நாவலுக்கு 1989 இல் புக்கர் பரிசு கிடைத்தது. இந்த நாவல் திரைப்படமாக எடுக்கப்பட்டபோது அன்ரனி ஹெப்கின்ஸ் நடித்திருந்தார். இவரின் படைப்புக்களில் காலங்கள், நினைவுகள், தன்னிலை மாயத் தோற்றம் என்பன வெளிப்படும். "எதற்கும் சரியான வரவேற்புக் கிடைக்காத இக்காலத்தில் ஒரு பங்களிப்பைச் செய்கிறேன்" என்கிறார் கசுவோ.

பல நாவல்களை எழுதியிருந்தாலும் அவற்றில் ஏதாவது ஒன்றே அனேகரின் கவனத்தைப் பெற்றிருக்கும். இம்முறை யதார்த்த இலக்கியங்களை புறம்தள்ளிவிட்டு, வினோத கற்பனையாக 2015 இல் வெளிவந்த நாவலை நோபல் அக்கடமி விருதுக்காக தெரிவு செய்தது. இந்நாவலின் உணர்வுகளின் விசைகள் மிகவும் ஆழத்தின் கீழ் உள்ள மாயமான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன என்ற அடைமொழியால் குறிப்பிட்டு பரிசை அறிவித்துள்ளது நோபல் அக்கடமிஅறிவித்துள்ளது.

இந்நிலையில் அவர் ஜேர்மனிக்கு சென்றிருந்தபோது தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணல் வரவேற்பைப் பெற்றது. அதன் தமிழ் மொழி வடிவம் இங்கு பிரசுரமாகின்றது.

**கேள்வி:** நீங்கள் கேம்ஸ் ஒவ் த்ரோன் (ஒரு மசாலாப் படம்) என்ற படத்திற்கு சென்று வந்தீர்கள் என்பதுதலைப்புச் செய்தியாக வந்தால்

**கசுவோ:** 'கேம்ஸ் ஒவ் த்ரோன்' என்ற நாவலின் விற்பனை சிறிது அதிகரிக்கும். ஆனால் அந்த வகை எழுத்துக்களிலிருந்து என்னை நான் வளர்த்துக் கொள்ளவில்லை.

**கேள்வி:** இந்த நாவலின் கதை ஐந்தாம் நூற்றாண்டின் அரசர் ஆதரின் காலத்தில் நடப்பதாகக் கூறியிருக்கிறீர்கள் இதனை எப்படி தெரிவு செய்தீர்கள்?

**கசுவா:** உண்மைதான். கதை ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்தது தான். ஆனால் ஒரு பெரிய கால இடைவெளியில் தற்காலத்துக்கும் உரியதே. உரோமர்கள் தோல்வி அடைந்த பின் ஆங்கிலேய செக்சன் பிரிவு பிரிட்டனில் நிலைகொள்கிறது. ஒரு நினைவுப் பிசகல் எனலாம். இக்காலம் பற்றி சரியான சான்றுகள் இல்லை. இதனால் நாவலை எழுத எனக்கு அதிக சுதந்திரம் இருந்தது.

**கேள்வி:** 'The buried giant' சரித்திர நூல் அல்ல. அழகான சுவையான ஒரு நாவல் தான். இதனை முழுமையாக வினோத வகையான நாவல் எனக் கூறலாமா? அல்லது அதையும் தாண்டியதா?

**கசுவா:** இது எந்த வகையிலும் அடங்காது எனவும் கூறலாம். ஒரு நாவலை எழுதத் தொடங்கும்போது அதை எந்த வகையில் சொல்லலாம் எனப் பார்ப்பேன். இந்த நாவலுக்கு பறக்கும் நாகங்கள் மற்றும் அரக்கர்ளைப் பயன்படுத்தியுள்ளேன். இந்நாவல் தரும் செய்தி எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டுமா? இல்லையா என்பதுதான். சில சம்பவங்கள் கெட்டவையாக ஒரு சாராருக்கு அமைந்தால் அவர்கள் அவற்றையும் நினைவில் வைத்திருக்கத்தான் வேண்டும். நாம் எப்படியோ வெவ்வேறு மனிதக் கூட்டங்களை சேர்ந்தவர்கள்தான். இதனால் இவற்றால் வரும் கேள்விகளுக்கு அடிமைப்பட்ட-வர்களாகவே இருப்போம்.

**கேள்வி:** அந்த வகைக் கேள்விகளுக்கு இந் நாவல் பதில் கூறுகிறதா?


**கசுவா:** உண்மையில் இது ஒரு காதல் கதை. மண வினைகளின்போது குடும்பங்களில் பிளவு ஏற்படுகிறது. ஆனால் குடும்பங்கள் உடையாமல் இருக்க சரி செய்துகொண்டு போகிறார்கள். ஆனால் நாடுகள், இனங்கள் சரி செய்வதில்லை. எவ்வளவு காலம் மௌனமாக இருப்பார்கள்? என்ற கேள்வி எழுகிறது. அப்படியே சரித்திர நிகழ்வுகளை மறந்தே போய் விடுவார்களா? இல்லையே. அந்தக் கரிய நிகழ்வுகள் மீண்டும் துளிர்விடும். இந் நாவலில் வரும் வயதான தம்பதியர் மறதியுடன் வாழ்கிறார்கள். பழைய சரித்திர சம்பவங்களை மறந்து விட்டனர். ஆனால் இப்போதுள்ள நல்ல நினைவுகளுடன், பழைய கசப்பான நினைவுகள் தலை தூக்கினால் என்ன செய்வது என யோசிக்கிறார்கள். பழைய நினைவுகள் வந்து தமது அன்பைக் கெடுத்து விடுமா? என அத்தம்பதியினர் நினைக்கிறார்கள். பழைய துன்பியல் நினைவுகளுடன் வாழும் ஒரு சமூகத்தின் அங்கம்தானே இவர்களும். சமூகத்தில் இவை வரும்போது மீண்டும் ஒரு சிவில் யுத்தம் வரலாம். இப்போதைய கேள்வி பழைய நினைவுகள் மீண்டும் வருமா? அல்லது வராதா? என்பதுதான்.

**கேள்வி:** ஆகவே இப்பிரச்சினைகளை- சமூகத்தினரும் நாடுகளும் கலந்துரையாடல் செய்யமுடியாதா?

**கசுவா:** கலந்துரையாடல்கள் கசப்பை ஏற்படுத்தலாம். ஆனால் எல்லா நாடுகளும் ஏதோ ஒரு சம்பவம் புதைந்து விட்டது என நினைக்கிறார்கள். மறக்கலாமா? வேண்டாமா? என்பதை ஒருபோதும் நாவல் கூறாது. நடந்தவற்றை அப்படியே மறக்கச் சொன்னால் பாதிக்கப்பட்டவர்கள் சினம் கொள்வார்கள், சதா பழையதை நினைவுகூர்ந்தாலும் பழிவாங்கலே மிஞ்சும் மத்திய கிழக்கில் இன்று நடப்பது இதுதான். (ஈழத்துக்கும் இது பொருந்தும்)

**கேள்வி:** இடப்பெயர்வுகள் பற்றி உங்கள் கருத்து?

**கசுவோ:** பல வருடங்களாக எழுதுகிறேன். பொஸ்னியா, ருவாண்டா போன்றவை இந் நாவல் எழுதிய காலத்தில் என்னில் தோன்றியவை. எனது நாவல் யுத்தம் பற்றியது என்பதால் இடப்பெயர்வுகளும் வருகின்றன. மக்கள் அருகருகே தம்மை சமாதானப்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்தான். ஆனால் இப்படி ஒரு தலைமுறை சிநேகிதமாகி விட்டது போல் வாழ்ந்தாலும், பழைய கருமையான நிகழ்வுகள், அவர்களுக்குள் உட்புகுந்து சண்டைகளாக மாறும். சண்டைகளால் மக்கள் இடம்பெயர்வார்கள். பாதுகாப்பான இடங்களை நாடுவார்கள். நடுவழியில் பலர் இறந்துவிடுவர்.



நம்பமுடியவில்லை. 48 ஆண்டுகளுக்கு முன்னர் என்ன நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இன்னமும் இருக்கிறோம். 1970 ஆனி சிரித் திரன் இதழில் "நாலு பேரைக் கேட்டோம்" என்ற பகுதியில் "தமிழினம் ஒதுக்கப்படுகிறதா" என்ற தலைப்பில் வெளியான கருத்துக்கள் இங்கு மீள்பிர சுமாகிறது. மூன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தும் - பல கோடி ரூபா சொத்துக்களை இழந்தும் - விடுதலைக்காக அங்கங்களை இழந்து இயங்கு நிலையை தொலைத்தவர்களுமாக வாழும் நிலையிலும் நம்மால் எதை யும் மாற்றமுடியவில்லை.நமக்காக உழைக்கவோ - குரல்கொடுக்கவோ நம்மவர்களும் இல்லை - சர்வதேசமும் இல்லை. இதையே அன்று உணர்த்திய வைர வரிகள் இவை.
- ஆசிரியர்

**தமிழினம் ஒதுக்கப்படுகின்றதா?**

தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லை. சுதந்திரமான ஆட்சி இல்லை. அவன் எங்கும் சிறுபான்மையினமாகவே வாழ்கிறான். இலங்கையைப் பொறுத்த வரை தமிழினம் சிறுபான்மையினமாகி, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டே வாழ்கின்றது.

நம் இனம் மற்ற இனத்தால் ஒதுக்கப்படுவதைவிட, தன்னைத்தானே ஒதுக்குகின்றது என்று சொல்வதுதான் பொருந்தும். நம்மை நாமே ஒதுக்கு கின்றோம். சிலரை ஒதுக்கி வைத்தே வாழ்கிறோம். நமக்குள் எத்தனை சாதிகள், பிரிவுகள், கட்சிகள்? எம்மவர் ஒரு பிரிவினரை ஆலயங்களுக் குள் விட மறுக் கிறோம். தமிழினம் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்னும் கருத்துரைக்கி ணங்க வாழ்ந்த இனம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொன்னுரை யைத் தந்த, கணியன் பூங்குன்றனாரைப் பெற்ற இனம். நம் தமிழினம், இன்று மற்ற இனத்தவர் எள்ளி நகையாடும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமக்குள் ஒற்றுமை இல்லை. எமக்குள் இருக்கும் ஒதுக்கல் பிரச்சினையை இன்னும் நாம் தீர்க்க வில்லை. இந்த மனப்போக்கு இருக்கம்போது "நாம் இன்னொரு அனத்-தால் ஒதுக்கப்படுகிறோம்" என்று சொல்வது எவ்வளவு பேதமை. "ஒட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று" - இதுவே வழக்கம். எனவே நாம் எமக்குள் இருக்கும் ஒதுக்கற் பிரச்சினையைத் தீகும் போட்டி பூசல்களை ஒழித் தாக வேண்டும்.

என்று நாம் நமது வேற்றமைகளை மறந்து ஒற்றுமைப் படுகின் றோமோ, அன்றோ எமக்கு விடிவு காலம்! இதை ஈழத் தமிழ் இளைஞர் கள் யாவரும் நன்கு உணர வேண்டும். வருங்காலம் நம்முடையது. அதை நாமே செப்பனிட வேண்டும். அதற்கான வழி வகைகளைத் தாமே வகுக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு ஈழத்தமிழ் இளைஞன் நெஞ்சிலும் பசு மரத்து ஆணி போல பதிய வேண்டும். இதற்கு இளைஞர் இயக்கம் ஒன்றுதோற்று விக்கப்பட வேண்டும். அவ் வியக்கம் எவ்வித அரசியல் கட்சிகளையும் சாராது, தனி வழி நின்று சாதனைகளைப் புரிவதாக இருக்க வேண்டும். தமக்குள்ளிருக்கும் ஒதுக்கல் பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும். இப்பொறுப்புள்ள பணி இளைஞரின் கையிலேயே உள்ளது.

இளைஞர்களின் எழுச்சியால் பல நாடுகளின் சரித்திரங்கள் மாற்றப் பட்டதை நாம் அறிவோம் எனவே அரசியல் சார்பற்ற இளைஞர் படை ஒன்று உருவாக வேண்டும். தமிழினத்தின் ஒதுக்கல் பிரச்சினை தீர, இதுவே வழி! இதுபோன்ற பிரச்சினைகளை அலசி ஆராயக் களம் அமைத்துக் கொடுத்த சிரித்திரனுக்கு எனது நன்றி.

**– புலோலியூர் பார்த்திபன்**


# தரம் 4 மாணவர்களின் பெற்றோர்களே...
## (2018 புலமைப்பரிசில் பரீட்சை)

**திருத்தற் சேவையுடன் மாதம் ஒரு பரீட்சை**

**உங்கள் பிள்ளைகளின் புள்ளியீட்டும் திறனை மேலும் அதிகரிக்க விரும்புகின்றீர்களா?**

**ஒளிஅரசி சஞ்சிகை மாதாந்தம் நடத்தும்**

**பரீட்சையுடன் உங்கள் பிள்ளைகளையும் இணைத்துக்கொள்ளுங்கள்**




மாதம் ஒருமுறை
**சிங்கள மொழிபெயர்ப்பு**
வினாத்தாள் ஒளிஅரசி
சஞ்சிகையில் வெளிவரும்

**இதனை உங்கள் பிள்ளைகள் மூலம் சுயமாக செய்து (நேரம் கணித்து) சஞ்சிகையில் உள்ள கொழும்பு முகவரிக்கு ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பினால் 10 நாட்களுக்குள் எமது விசேட ஆசிரியர் குழுவால் திருத்தப்பட்டு உங்கள் வீட்டுக்கு விடைகளுடன் அனுப்பப்படும்.**

**120 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் பெயர் விபரங்களை ஒளிஅரசி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு பாராட்டி வாழ்த்தப்படும்.**

விநியோக முகாமையாளர், ஒளிஅரசி
யாழ்ப்பாணம் - 071 862 8351 / 071 862 8369,
கிழக்கு - 071 872 4057, தலைமை அலுவலகம் - 011 432 4444


**சிரித்திரன்**

# ஒதுக்கப்படும் தமிழினம்! 48 ஆண்டின் பின்னும் பொருந்தும் தீர்க்கதரிசனம்

காலம் கடந்த கேள்வி இது. அத்தோடு இன்றும் தமிழினம் ஒதுக்கப்படுகின்றதா? என்ற கேள்வியில் தொக்கி நிற்கும் கருத்தை எண்ணாமலிருக்கவும் முடியாது. ஒதுக்கப்படவில்லை என்று எண்ணும் தமிழரும் உளர் போலும்.

தமிழினம் ஒதுக்கப்படுவதோடு மட்டுமன்றி, தன்னைத் தானேயும் அது ஒதுக்கிக் கொள்ளுகின்றது. தன் இனத்தின் ஒரு பகுதியையே ஒதுக்கிப் பலமிழந்து நிற்கிறது. தன் மொழியாம் தெய்வத் தமிழ்மொழியினை , என்றோ ஆலயங்களிலிருந்து ஒதுக்கி, பின் இல்லங்களிலிருந்தும் ஒதுக்கி, ஈப்போ கை , வாயினின்றும் கூட ஒதுக்கி விடுகின்றது. தன் பண்பாடுகளையும் ஒதுக்கி வருகின்றது.

இன்னும் நூறு வருடங்களில், தமிழர்கள் ஈழத்தில் இருந்தார்களா? என்று புதை பொருள் ஆராய்ச்சி செய்யும் நிலை ஏற்பட்டால், இருந்தார்கள் என்பதற்கான பொருட்களோ, தடயங்களோ அகப்பட மாட்டாது.

ஈழத்தில் ஆங்கிலேயர் , வங்காளிகள், இந்துஸ்தானிகள், ஜிப்பியினர், மலையாளத்தார், பர்மாவினர் இருந்ததற்கான அத்தாட்சியைக் காண்பாரேயன்றி, தமிழ் இருந்ததற்கான அவர் அணிந்த ஆடை, ஆபரணங்களைக் கூடக் காணாது தவிப்பர்.

தாம் ஒதுக்கியவைகளை மீண்டும் தம்முள் ஒன்றாக்கி, தன்மானம் பெற்று "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்ற ஞானோதயம் வரப்பெற்று நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டு ஒவ்வொரு தமிழனும் செயல் படத் தொடங்கும் நாளே, தமிழ் இனம் ஒதுக்கப்படாத நல்ல நாளாக அமையும்.

- செல்வி. சத்தியபாமா சதாசிவம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

பெரும்பான்மை, சிறு பான்மை எனும் அரசியற் பிரச்சினையை அந்நியர்கள் கிளப்பி வைப்பதற்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்பே தமிழினம் இங்கு தனிச் சிறப்புடன் வாழ்ந்திருக்கிறதென்பதை சரித்திர, வரலாற்று ஆசிரியர்கள் பலர் ஒப்பக் கொண்டிருக்கின்றார்கள்.

– சந்திரவதனா –

# பயணம்




இன்று புகையிரதத்தில்தான் பயணிக்க வேண்டுமென நேற்றிரவு முடிவான பொழுதே எனக்குள் மெல்லிய சந்தோச அலை அடிக்கத் தொடங்கி விட்டது. எனது கணவர் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்துக்கு வேளைக்கே போய் முடிக்க வேண்டிய வேலைகள் இருக்கிறதாம். அதனால் அதிகாலையிலேயே தான் காரில் போய் விடுவதாயும் என்னை பின்னர் புகையிரதத்தில் வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

எப்போதும் இந்தக் காரில்தானே..! அதுவும் அதிவேக வீதியில் அவசரமாய் பயணிப்பது. நீண்ட பொழுதுகளின் பின் புகையிரதத்தில் போக இப்படியொரு வாய்ப்பு என்றதும் உண்மையிலேயே எனக்கு சந்தோசந்தான்.

எனக்குத் தேவையான எல்லாவற்றையும் காருக்குள்ளேயே அடைத்து அனுப்பி விட்டேன். சிறிய கைப்பையுடன் ஒரு கொப்பியும், பேனையுமாக ஏறிய போது புகையிரதத்தினுள் யன்னலோரமாக இருக்கை கிடைத்தது. மனசுக்குள் சந்தோசம்துள்ளியது.

வெயிலின் முறைப்பும் இல்லாமல், குளிரின் குத்தலும் இல்லாமல் காலைச் சிலிர்ப்போடு இயற்கை கண்களை இதமாக வருடியது. காற்று யன்னல் வழி மேனியைத் தழுவியது. இயற்கையை ரசித்த படி மனசு ஏகாந்தத்தில் சுகிக்கத் தொடங்கியது. புகையிரதம் தாலாட்டியது.

வெளி அழகாய்... மரங்கள் எல்லாம் அவசரமாய் நகர்ந்து கொண்டிருந்தன. குருவிகள் கெந்துவதும், ஏதோ நினைத்து விட்டு மீண்டும் பறந்து மரங்களில் குந்துவதுமாய் இருந்தன. கவிஞர் சோலைக்கிளி இதைக் கண்டால் கட்டாயம் ஒரு குருவிக் கவிதை புனைந்திருப்பார். எனக்கும் ஏதேதோ மனசுக்குள் பூத்தன. கவிதையாய் வடிக்க வார்த்தைகள்தான் வர மறுத்தன. "இனிது இனிது ஏகாந்தம் இனிது" ஔவைப் பாட்டியின் வரிகளின் அர்த்தம் புரிந்தது.

திடீரென்று, புரியாத ஏதோ ஒரு பாசையில் யாரோ கதைக்கும் பெரிய சத்தம் கேட்டது. ம்... புகையிரதம் நின்றது கூடத் தெரியாமல்... நான். அதற்கிடையில் அடுத்த தரிப்பு நிலையம் வந்து விட்டது. ஏறுவோரும், இறங்கியோரும் தத்தமது திசைகளில் வெளியில் விரைய.. ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த சில பெண்களும், ஒரு ஆடவனும் தமது உயர்ந்த குரல்கள் மற்றவர்களைத் தொந்தரவு செய்யுமே என்ற எந்தவித பிரக்ஞையுமின்றி அடிக்குரலில் உரத்துப் பேசியபடி நானிருந்த பெட்டியினுள் ஏறினார்கள்.

நான் மீண்டும் யன்னல் வழி பார்வையைச் செலுத்தி இயற்கையுடன் ஐக்கியமாகினேன். மனசுக்குள் இனிமையான கவிதையொன்று பிரசவமாவது போன்றதொரு மகிழ்வான உணர்வு. சோதியா, சோலைக்கிளி..., போன்றோரின் கவிதைகள் இப்படியான சந்தர்ப்பங்களில்தான் பிரசவித்தனவோ!

விஜயராகவனின் நுங்குக் கவிதை அடிக்கடி மனசுக்குள் எட்டிப் பார்த்தது. அவருக்குக் கவிதையை அழகாக வாசிக்கவும் தெரியும். ஒரு தரம் அவரது நுங்குக் கவிதையை ஐபிசி-தமிழ் வானொலியில் கேட்டு விட்டு இரவெல்லாம் ஒரே நுங்குக் கனவு. சீக்காய்களை எல்லாம் ஒரு பக்கமாய் ஒதுக்கி விட்டு, தன் வீட்டு முன்றலில் நின்ற ஒற்றைப் பனையிலிருந்து கந்தசாமியைக் கொண்டு இறக்குவித்த பருவ நுங்கைப் பக்குவமாய் சீவி பெருவிரலால் குத்தி இழுத்து பனைமுகிழில் விட்டு... ம்...ம்... நாக்கில் சுவை நரம்புகள் சுரந்து...

பக்கத்தில் அடிடாஸ் ஆஃப்ரர் சேவின் வாசனை கமகமக்க "ஹலோ" என்றது ஒரு குரல். நுங்கை அப்படியே அந்தரத்தில் விட்டு விட்டு நிமிர்ந்து பார்த்தேன். சற்று முன்னர் வந்த ஆபிரிக்கப் பிரஜைகளில் ஒருவனான அந்த ஆடவன்தான் என் அருகில் அமர்ந்தான். இவனோடு கூட வந்த பெண்களுக்கருகில் இவனுக்கு இடம் கிடைக்கவில்லைப் போலும்.

பதிலுக்கு"ஹலோ" சொல்லி விட்டு மீண்டும் யன்னலினூடு நான் இயற்கையிடம் சென்றேன்.

"மன்னிக்கோணும், உனக்கு என்ன பெயர் என்று சொல்லுவியோ..?" ஆபிரிக்கன் ஜேர்மனிய மொழியில் வினவினான்.

திரும்பி "கோகிலா" என்றேன்.

"ம்... கோ..லா.. நல்ல பெயர்."

எனது பெயரை அவன் அப்படித்தான் உச்சரித்தான்.

"நன்றி" சொல்லி விட்டு அவனது பெயரைக் கேட்காமலே மீண்டும் யன்னல் வழி வெளியோடு ஐக்கியமானேன்.

"கோ...லா...! எங்கை போறாய், ஸ்ருட்கார்ட்டுக்கோ?"

"ம்... "

"அங்கை வேலை செய்யிறியோ? "

"இல்லை. எங்கடை நாட்டுக் கலைநிகழ்ச்சி ஒன்றுக்குப் போறன்."

"உன்னை எனக்குத் தெரியும். நீ உன்ரை தங்கைச்சியை சங்கீத வகுப்புக்குக் கூட்டிக் கொண்டு வாற பொழுது நான் காணுறனான்."

"அப்பிடியோ..! எனக்கு உன்னைத் தெரியாது. நான் உன்னை ஒரு நாளும் கண்டதில்லை. அதுபோக அது என்ரை தங்கைச்சி இல்லை' மகள்."

"நான் நம்ப மாட்டன். நீ இவ்வளவு இளமையா இருக்கிறாய். ஆசியப் பொம்பிளையள் எல்லாரும் இப்பிடித்தான் அழகாக இருப்பினையோ?"

ம்... தொடங்கி விட்டான். 'இந்த ஆண்களே இப்படித்தானோ! தமது மனைவியரல்லாத வேறு எந்தப் பெண்ணைக் கண்டாலும்' நீ அழகு.., நீ இளமை' என்று' சின்னதான எரிச்சல் மனசுக்குள் தோன்றியது.

ஜேர்மனியில் ஒருவன் ஒரு பெண்ணை இப்படிக் கேட்கிறான் என்றால், அதன் அர்த்தம் வெறுமனே கோப்பி குடிப்பதற்கான அழைப்பல்ல. அதற்கும் மேலான சம்மதம் தேடல் அது. அருகமர்ந்து அரை மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்கிடையில் அவன் தேடல்.. அவனைச் சொல்லிக் குற்றமில்லை. இது ஜேர்மனிய நாகரிகங்களில் ஒன்று.

மீண்டும் யன்னல் வழி வெளியே லயிக்க முனைந்த போதெல்லாம்.. "கோ..லா..! கோ..லா..!" என்று அழைத்து எனக்குக் கோபமூட்டினான். ஒவ்வொரு தரிப்பிலும் இறங்குவோரும், ஏறுவோருமாகப் பயணிகள் மாறிக் கொண்டிருக்க இவன் மட்டும் என்னருகில் என் தனிமையைக் குலைக்க என்றே இருந்தான். என் சந்தோசத்தை மெதுமெதுவாகச் சூறையாடினான்.

"கோ...லா, என்னோடை ஒரு நாளைக்கு கோப்பி குடிக்க வருவியோ..?"

ம்.. ஜேர்மனியில் ஒருவன் ஒரு பெண்ணை இப்படிக் கேட்கிறான் என்றால், அதன் அர்த்தம் வெறுமனே கோப்பி குடிப்பதற்கான அழைப்பல்ல. அதற்கும் மேலான சம்மதம் தேடல் அது. அருகமர்ந்து அரை மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்கிடையில் அவன் தேடல்.. அவனைச் சொல்லிக் குற்றமில்லை. இது ஜேர்மனிய நாகரிகங்களில் ஒன்று.

"இல்லை. எனக்கு நேரமில்லை."

வார்த்தைகளோடு எரிச்சலும் ஒட்டியபடி வெளியில் கொட்டியது.

"பிளீஸ்... ஒரு நாளைக்கு. ஒரே ஒரு நாளைக்கு..."

"இல்லை, எனக்கு இவைகளுக்கு நேரமுமில்லை. இவைகளில் ஆர்வமுமில்லை. நான் திருமணமானவள். எனக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள்."

"அதனால் என்ன..? நானும் திருமணமானவன்தான்."

"அப்பிடியெண்டால், உன்ரை மனைவியோடை போய், கோப்பியைக் குடியன்." சொல்ல வந்த வார்த்தைகளைச் சொல்லாமல் விழுங்கிக் கொண்டேன்.

அவனது கரைச்சல் தொடர்ந்தது. கெஞ்சிக் கேட்டான். பொதுவாக ஜேர்மனியர்கள் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். "எனக்கு நேரமில்லை" என்று ஒரு தரம் சொன்னால் போதும். அப்படியே ஒதுங்கி விடுவார்கள். நாளாந்தம் சந்திப்பவர்களாக இருந்தால் அந்த எண்ணத்தை அப்படியே விட்டு விட்டு மீண்டும் நட்பாகப் பழகத் தொடங்கி விடுவார்கள்.



( 18 ஆம் பக்கம் பார்க்க)



# கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்... குண்டுகளைக் கண்டுகொண்டேன்...

-ராஜேஸ்மணாளன்-

உடல் பருத்திருப்பது, மனித வாழ்வில் பல பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது என்பது நாமறிந்த சங்கதி. உடம்பு பருத்திருப்பது, பல அசௌகரியங்களை ஏற்படுத்தி விடுகின்றது. வேண்டாத விருந்தாளிகளாக, பல நோய்களுக்கு கூடாரமடித்துக் கொடுத்து விடுகின்றது. அது மாத்திரமல்ல, விமானப் பயணங்களில் இருக்கை வசதிகள் பொருத்தமாக அமைவதில்லை. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்படியானவர்கள் தமது வெளிநாட்டுப் பயணங்களின் போது, தங்கும் ஹோட்டல்களில் கூட, தேவைப்படும் வசதிகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இதையெல்லாம் போக்கும் விதமாக, அளவில் பெரிய கதிரைகள், படுக்கைகள், என்று உடல் பருத்தவர்கள் தேவைக்கேற்ப தளபாடங்களைக் கொண்டதாக, உல்லாசப் பயணிகளுக்கான புதிய ஹோட்டல் சேவையை, கரீபியன் தீவிலுள்ள ஒரு ஹோட்டல் ஆரம்பித்துள்ளது. இப்படியொரு சேவையை பிரத்தியேகமாக ஆரம்பிக்கும், உலகின் முதல் ஹோட்டல் இதுவாகவே இருக்கின்றது. அகன்ற கதவு நுழைவாயில்கள், பலமான அகன்ற கட்டில்கள், பலம் மிக்க கதிரைகள், அதிக உடல் எடையைத் தாங்கும் விதத்தில் அமைக்கப்பட்ட கழிவறைகள் என்று ஒவ்வொன்றிலும், இந்த உடல் பருத்தவர்களையே குறியாக வைத்து, சகல வசதிகளையும் செய்துள்ளார்கள்.

இந்தப் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தும் ஜேம்ஸ் கிங், 'எனக்கு இப்படியொரு எண்ணம் 14 வருடங்களுக்கு முன்பு மனதில் துளிர்த்து. இப்பொழுதுதான் சாத்தியப்பட்டுள்ளது" எனக் கூறியிருக்கின்றார். கரீபியன் தீவுகளில் ஒன்றான கிரனேடாவின் ஹோட்டல் ஒன்றின் முகாமைத்துவ இயக்குநராக இவர் அப்பொழுது கடமையாற்றிக் கொண்டிருந்தபோது, ஹோட்டல் விருந்தாளி ஒருவரால் கதிரை உடைபட்டுள்ளது. இவரது அதீத எடையைத் தாங்கமுடியாது இவர் உட்கார்ந்தபோது கதிரை உடைந்துள்ளது. ஹோட்டல் விதிமுறையின் பிரகாரம், இவர் தண்டப் பணமாக 150 டொலர் செலுத்தி இருந்தார். இந்தச் சம்பவத்தின் எதிரொலியாகவே, தான் இப்படியொரு வசதியுடன் ஹோட்டலை ஆரம்பித்துள்ளதாக இவர் கூறுகின்றார்.

இவருக்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. தன்னிடம் வருபவர்களில் 60 வீதமானவர்கள் அமெரிக்கர்கள் என்றும், அதில் பத்து வீதமானவர்கள் நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர் கூறுகிறார். ஏனையோர் பிரிட்டன், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவதாக இவர் கூறுகிறார். ஆனால் இங்கே ஒரு விடயத்தைக் கவனித்தாக வேண்டும். 'றிசோர்ட்' என்று அழைக்கப்படும் இந்த ஹோட்டல் சிறு சிறு குழுவாக வருபவர்களையே ஏற்கச் சம்மதிக்கின்றது. தனியாக வரும் உல்லாசப் பயணிகளை இவர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

நட்பு ரீதியான தங்கள் சேவையைத் தொடருவதானால், அது சிறு சிறு குழுக்களாக இருந்தால்தான் சாத்தியம் என்கிறார் இந்த ஹோட்டல் உரிமையாளர் : நான் குண்டு என்ற மனோரீதியான தாக்கத்திலிருந்து விடுபட்டு, தன்னை ஒத்தவர்களுடன் கலந்து, விடுதலை நாட்களை மகிழ்வோடு கழிக்க, வகுத்துள்ள இந்தத் திட்டம் அற்புதமானதொன்றுதான்!

# எடையும் கொடையும்

பிள்ளைகள் கிடைப்பது என்பது இறைவனின் கடாட்சம். பெற்றோர்க்கு இறைவன் கொடுக்கும் செல்வம். இந்த இறைவனின் கொடையில் எடையும் சேர்ந்து கொள்வது, பெற்றோர்க்கு கிடைக்கும் மேலதிக செல்வம் என்று சொல்லலாமா? நல்ல எடையுடன் கூடிய பிள்ளை பிறப்பது, குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் பிறக்கின்றது என்பதற்கு இன்னொரு அடையாளம்...

இங்கிலாந்தின் சரித்திரத்தில் அதிகூடிய எடைகொண்ட இரட்டைப் பிள்ளைகள் என்ற சாதனையோடு, நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவருக்கு, புதிதாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. 33 வயதான பமி காடினர் என்ற பெண்மணிக்கு



கிடைத்த இரட்டைக் குழந்தைகளின் மொத்த எடை 16 இறாத்தலைத் தாண்டியிருக்கின்றது. அதாவது சுமாராக இரண்டு குழந்தைகளினதும் எடை 7.2 கிலோ! சராசரியாக இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும் போது, இங்கிலாந்தில் 5இறாத்தல்கள் கொண்டதாகவே இரட்டைக் குழந்தைகள் காணப்படுவதுண்டு. குழந்தைகள் இரண்டுமே ஆண்கள். யோசப், லூக் என்பதுதான் இந்தக் குழந்தைகளின் பெயர்கள். தந்தையும் தாயும் ஆனந்தத்தால் திக்குமுக்காடிப் போயிருக்கின்றார்கள்.

புதிய இரட்டைக் குழந்தைகள், அதிலும் பிறக்கும்போதே சாதனையாளர்களாகப் பிறந்துள்ள குழந்தைகளைக் கண்டு, எந்தப் பெற்றோர்தான் மகிழ்வாயல் இருப்பார்கள்? இந்தப் பிள்ளைகள் பிறக்கும் முன்பு இருந்த நிலையோ வேறு. இரட்டைப் பிள்ளைகளில் ஒன்றுதான் உயிர் தப்பும். ஏனென்றால், இரண்டில் ஒரு பிள்ளை மிகச் சிறியதாக இருக்கின்றது' என்று மருத்துவர்கள் பிரசவத்துக்கு முன்னர் எச்சரித்திருந்தார்கள். காலப் போக்கில், மருத்துவர்கள் அறிக்கையின் படி, சிசுக்கள் நன்றாக வளர்கின்றன எனச் சொல்லப்பட்டது. பிறக்கும் பிள்ளைகள் சுமாராக ஐந்து தொடக்கம் ஆறு இறாத்தல்கள் வரை இருக்கலாம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்டபோது, பலரது எதிர்பார்ப்புகளையும் மிஞ்சியதாக இருந்துள்ளன இந்தக் குழந்தைகள்! குழந்தைகள் கிடைத்த மகிழ்ச்சியிலும், தாய்க்கு ஒரு கவலை.

அது என்ன தெரியுமா? பிறந்த குழந்தைகளுக்கு அணிவிக்க ஆசை ஆசையாய் வாங்கி வைத்து உடுப்புகள் எதையுமே குழந்தைகளுக்கு அணிவிக்க முடியவில்லை என்பதுதான் அவரது கவலை! இன்னொரு கவலையும் இருக்கின்றது. 'இவர்களை குழந்தைகள் குழுவில் கொண்டு சென்று விடும்போது, இவர்களது பெரிய தோற்றங்களைக் கண்டு, தான் பொய்யான வயதைச் சொல்வதாகப் பிறர் சந்தேகிக்கலாம் என்ற அங்கலாய்ப்பும் இவரிடம் இருக்கின்றது. ஆணும் பெண்ணுமாக கலந்து பிறந்த, அளவில் பெரிய இரட்டைக் குழந்தைகள் என்று பார்த்தால், 2007 ஆம் ஆண்டு பிரிட்டனின் லங்காசயர் மாவட்டத்தில் பிறந்த குழந்தைகள்தான் சாதனையாளர்களாகின்றன. இரண்டு குழந்தைகளினதும் மொத்த எடை 18 இறாத்தல். உலகின் அதிகூடிய எடையுள்ள குழந்தைகள் என்று பார்த்தால், அமெரிக்காவின் அர்க்கன்சாஸ் மாவட்டத்தில், 1924 ஆம் ஆண்டு பிறந்த இரட்டைக் குழந்தைகளின் மொத்த எடை 27 இறாத்தல் 2 அவுண்ஸ்!

# தென்னை உச்சியில் என்னை மறந்தேன்...



அங்கே அவர்களுக்கு தம் பருத்த உடலால் மனோ ரீதியான ஒரு சங்கடம் தொற்றியிருந்தது. இங்கே இவருக்கோ, எவராவது கொன்று விடுவார்களோ என்ற மனோ ரீதியான பயம் பீடித்திருந்தது. இதில் தப்பிக்க அவருக்கு ஒரேயொரு வழிதான் தெரிந்தது. பேசாமல் மர உச்சியில் ஏறி இருந்து விடுவோம் என்பதுதான் அந்த முடிவு. 2014 ஆம் ஆண்டு, சுமார் 60 அடி உயரமான தென்னை மர உச்சிக்கு ஏறி அங்கே பதுங்கிக் கொண்டவர், மூன்று வருடங்களாகத் தரை இறங்கவே இல்லை. சமீபத்தில் அதிகாரிகள் இந்த பிலிப்பைன்ஸ் நாட்டவரைப் பலவந்தப்படுத்தி இறக்கியிராது விட்டால், தன் மரணகாலம் வரை, உச்சியிலேயே இந்த விநோத மனிதன் இருந்திருப்பார் என்று சொல்லப்படுகின்றது. ஏன் இந்த விபரீத ஆசை இவருக்கு வந்தது? மூன்று வருடங்களுக்கு முன்பு இன்னொருவருடனான வாக்குவாதத்தில். இவருடைய தலையில் துப்பாக்கியால் அடித்துள்ளார்கள். தன்னை எவராவது கொல்லக்கூடும் என்ற பயம் இவரை, வீட்டுக்குப் பக்கத்திலுள்ள, தென்னை உச்சிக்கு செல்ல வைத்துள்ளது. தினமும் தனக்குத் தேவையான உணவு நீர் போன்றவற்றை, தண்ணீர் மூலம் கயிற்றில் பிணைத்து மேலே எடுத்துக் கொள்வது இவரது வழக்கமாக இருந்துள்ளது. இவரது தாயார்தான் தினமும் இவற்றை மரத்தடிக்கு கொண்டுவருவாராம். இயற்கை கடன்களை, உச்சியிலிருந்தே தீர்த்துக் கொள்வாராம் இந்த விநோத மனிதர். இவருடைய தாயார், குளிக்கவாவது இறங்கி வா என்று பல தடவை கேட்டும், மகன் சம்மதிக்கவில்லை. தனக்குத் தேவையான உணவு, சிகரெட், உடை, தண்ணீர் ஆகியவற்றை மட்டும் கேட்டு எடுத்துக் கொள்வார் என்கிறார் தாய். சில சமயங்களில் பலமாக வீசும் புயல் காற்று, கடிக்கும் பூச்சிகள், எரிக்கும் வெயில் என்று எதனாலும் இவன் மனதை மாற்ற முடியவில்லை. எவராவது கீழே இறங்கும்படி பலவந்தப்படுத்தினால் 'யாரோ என்னைக் கொல்லக் காத்திருக்கிறார்கள். 'பேசாமல் இருங்கள்' என்று பதில் வரும் என்கிறார் இவரது சகோதரன் ஒருவன். 2000மாவது ஆண்டில் தன் மனைவியை இழந்துவிட்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். இரண்டாவது பெண் பிள்ளை பிரவசத்தின்போது, இவர் மனைவி இறந்துள்ளார். கில்பேர்ட் சஞ்சேஸ் என்ற பெயர் கொண்ட இவரது கிராமத்தின் பெயர் லாட்பால். அங்குள்ள அனைவருக்கும் இவர் மரமேறி இருப்பது தெரிந்த சங்கதி. ஆனால் எவருக்குமே இதில் தலையிட்டு, மர உச்சியில் இருப்பவரை கீழிறக்கும் ஆர்வம் இருந்ததில்லை.. ஆனால் இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி, படப்பிடிப்பாளர் குழு இங்கு வந்தபோது, ஊரறிந்த கதை உலகறிந்த கதையாகிற்று. முடிவில், 50 பேர் கொண்ட ஒரு குழு மரத்தை அறுத்து, இந்த மனிதரைப் பாதுகாப்பாக கீழே இறக்க பகீரத பிரயத்தனம் எடுத்துள்ளது. தொடர்ந்து கூனிக்குறுகி ஒரே இடத்தில் இருந்ததனால், பூச்சிக் கடிகள், வெயிலின் தாக்கம், கொல்லப்பட்டு விடுவோம் என்ற ஓயாத மன உளைச்சலில் பாதிக்கப்பட்டு மூளை என்று 47 வயதான இந்த மனிதர் நன்றாகவே பாதிக்கப்பட்டிருந்தார்.



# தங்கத்தின் நிறம் கறுப்பு...!



தங்கத்தின் நிறத்தில் அந்தப் புழுதி எங்கும் பரவிக் கிடக்கிறது. அந்தச் சிறு குழந்தைகளின் முகங்களிலும் கூட அத்தனை தூசு படர்ந்திருக்கிறது. அங்காங்கே சிறு குழிகள். ஒவ்வொரு குழிகளின் அருகிலும் 10 பேர் வரை கூடியிருக்கிறார்கள். வெயில் அனல் தகிக்கிறது. ஆனால், பெரும்பாலானவர்களின் கால்களில் செருப்பு இல்லை. இந்த மக்களையும், இந்த நாட்டையும் நாம் அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மேற்கு ஆபிரிக்காவிலிருக்கும் ஒரு சிறு நாடு "புர்கினா ஃபாசோ "(Burkina Faso). பல நூறு ஆண்டுகளாக பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்த நாடு. 1960 இல் சுதந்திரம் அடைந்தது. இருந்தும் பிரான்ஸின் கைகள் இன்றும் சற்று ஓங்கியே இருக்கிறது.

பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளின் கதைதான் புர்கினா ஃ பாசோவிற்கும். எல்லா வளங்களும் இருந்தும், வல்லரசு நாடுகளின் ஏமாற்று வேலைகளுக்குப் பலியாகி, துன்பப்படும் தேசம். இங்கு இவர்கள் பலியானது... வல்லரசுகளின் தங்க ஆசைக்கு. இது எழுதி, கேட்டு, ஹொலிவூட் படமாக பார்த்து சலித்த கதைதான். ஆனால், இரண்டு தலைமுறைகளாகியும் எதாவது ஓர் ஆபிரிக்க நாடு இது போன்ற விடயங்களுக்கு இரையாகிக் கொண்டுதானிருக்கிறது.

அந்தக் குழியின் ஆழம் 100 அடி வரை இருக்கும். அதனுள் ஒருவர் புகுவதே சிரமம். ஆனால், நாள் முழுக்க அதற்குள்; தங்கள் உயிரைப் பணயம் வைத்து இறங்கி வேலை செய்கிறார்கள். குறிப்பாக, 13 வயதிலிருந்தே சிறுவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பசியில் வாடி, ஒட்டிய உடம்புக்காரர்களான அந்தச் சிறுவர்களால் எளிதில் அந்தக் குழிகளினுள் நுழைய முடியும். வறுமையைத் தீர்க்க வேறு வழி இல்லாததால் அவர்களுக்கு வேறு வேலைகள் இல்லை என்பதாலும் இத்தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பல சிறுவர்களும் முதலில் இறங்கும்போது, பெரும் பயம் கொள்கிறார்கள். மூச்சுத் திணறல் ஏற்படுகிறது.

**உலகின் ஏதோ ஓர் மூலையில் முகம் தெரியாத யாரோ ஒருவர் தன் அலங்காரத்துக்காகப் போட்டு சந்தோசப்பட்டுக்கொள்ள, இன்னொருவர் நீரும், காற்றும், நிலமும் மாசுபட்டு வாழ்வும் வாழ்வியலும் சூறையாடப்பட்டு தன் மொத்த வாழ்வையும் இழந்து நிற்கும் அவலம் இதுதான்.**

சரி... உயிரைப் பணயம் வைத்து தங்கத்தை எடுப்பவர்கள் எல்லாம் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்களா என்று கேட்டால். அவர்கள் இன்னும் மோசமான நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதே வேதனையான யதார்த்தம். 100 அடி குழிக்குள் இறங்கி, அங்கிருக்கும் பாறைகளை உடைத்து கற்களை எடுத்து வருகிறார்கள். அதில் சில கற்களில் தங்கத் துகள்கள் இருக்கும். அது அத்தனை எளிதாக எல்லோர் கண்களுக்கும் அகப்படுவிடாது. அனுபவம் வாய்ந்தவர்களால் மட்டுமே அதைக் கண்டறிய முடியும். அந்தக் கற்களை எடுத்து வந்து, தூள் தூளாக உடைத்து, தங்கத் துகள்களைப் பிரித்தெடுக்கிறார்கள். பின்னர், அதை சில செயன்முறைகளுக்கு உட்படுத்தி, பாதரசத்தோடு கலக்கிறார்கள்.



இந்தச் செயன்முறை மிகவும் ஆபத்தான வகையிலிருக்கிறது. பாதரசத்தை, வெறும் கைகள் கொண்டு தங்கத்தோடு கலக்கிறார்கள். இது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் வாய்ப்பிருக்கிறது. பின்னர், கலந்த தங்கத்தை சூடாக்குகிறார்கள். பாதரசம் உருகிப் பிரிகிறது. இதை சூடாக்கும்போது வெளியேறும் புகை, கடுமையான நோய்களை ஏற்படுத்தக் கூடியது. 20 நாள்கள் கடினமாக உழைத்தால் 5 லிருந்து 10 கிராம் தங்கத்தை எடுக்க முடியும். அதை முகவர்களிடம் கொடுப்பர். அவர்கள் அதை உலகம் முழுக்க விற்பனை செய்வார்கள். இவ்வளவும் செய்தால் ஒரு நாளைக்கு ஒரு டொலர் - எங்கள் நாட்டின் மதிப்பில் சுமார் 150 ரூபாய் வரை உழைக்க முடியும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக, பலரும் தங்கள் குடும்பத்தோடு இந்த வேலையில் ஈடுபடுகிறார்கள். பல குழந்தைகள் இதனால் கடுமையான பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

100 அடி ஆழ தங்கச் சுரங்கத்தில் வெப்பம் 50 டிகிரிக்கும் மேலாக இருக்கும். அந்த இருட்டில் நுழைவதும் பயமாக இருக்கும். உடல் கடுமையாக வலிக்கும். இதையெல்லாம் சமாளிக்க சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிக் கிடக்கிறார்கள். குறிப்பாக சின்னஞ்சிறு சிறுவர்கள் கூட "ட்ரனடால்" எனும் போதைப் பொருளை உபயோகப்படுத்துகிறார்கள். 1.7 கோடி மக்கள் தொகைக் கொண்ட இந்த நாட்டில் 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 600 இற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு நிறுவனங்கள் இதில் ஈடுபட்டுள்ளன.

திடீர் நிலச்சரிவு, வெள்ளம் போன்ற அபாயங்களும் சுரங்கத்தில் அதிகம் இருக்கின்றன. எப்பொழுதும் புழுதியிலேயே உழன்று கிடப்பதால் இருமல், முட்டு, மலேரியா, கல்லீரல் என உடல் ரீதியில் நிறைய பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். புர்கினா ஃபாசோவின் குடிமக்களின் சராசரி ஆயுள்காலம் 57 வருடங்கள் என்கிறது அரசாங்கம். ஆனால், இந்தத் தங்கச் சுரங்கங்களில் வேலை செய்பவர்களின் சராசரி ஆயுள் 45 இற்கும் குறைவே.

உலகின் ஏதோ ஓர் மூலையில் முகம் தெரியாத யாரோ ஒருவர் தன் அலங்காரத்துக்காகப் போட்டு சந்தோசப்பட்டுக்கொள்ள, இன்னொருவர் நீரும், காற்றும், நிலமும் மாசுபட்டு வாழ்வும் வாழ்வியலும் சூறையாடப்பட்டு தன் மொத்த வாழ்வையும் இழந்து நிற்கும் அவலம் இதுதான். அந்தத் தங்க நகைகளின் நிறம் கறுப்புதான் என்பதை எத்தனை பேர் உணர்ந்திருப்பார்கள்?



# நெகிழி மாவலையில் நெகிழ மறுக்கும் மனிதர்கள்

நதிநீர் மாசுபாடு, கடலில் குறைந்துபோன மீன் வளம், காணாமல் போன சிட்டுக் குருவிகள் உட்பட பல அறிய வகை உயிரினங்களின் அழிவு, ஓசோனில் ஓட்டை, புவி வெப்பமயமாதல், மண் வளத்தின் அழிவு, இப்படி எத்தனையோ செய்திகளைக் கேட்டும் சூழலியல் பாதுகாப்பு சார்ந்த முயற்சிகள் சிறிதளவேனும் வளர்ந்ததாகத் தெரியவில்லை. வளர்ந்துவரும் வேகமான உலகத்தில் அனைத்தும் வேதிப் பொருட்களாகவும் (chemicals), நெகிழி (பிளாஸ்ரிக்) பொருட்களாகவும் பயன்படுத்தி இப்போது எதுவரை உண்மையென்று விளங்காத பிளாஸ்ரிக் அரிசி வரை வந்துவிட்டோம். ஆனால் அதன் பாதிப்புக்கள் குறித்து யோசிக்காமல் கடந்து செல்வது பேரழிவை நோக்கிய பயணத்தில் மனிதகுலம் சென்று கொண்டிருப்பதையே காட்டுகிறது. சூழலியல் குறித்து எத்தனையோ விழிப்புணர்வுகளைப் பல அமைப்புக்கள் தொடர்ந்து முன்வைத்தாலும் தவிர்க்க முடியாமலும், அலட்சியப் போக்காலும் தொடர்ந்து நெகிழி பயன்பாட்டை மட்டும் நம்மால் தவிர்க்கவோ, குறைக்கவோ முடியவில்லை. இந்நிலையில் நிலத்தையும், சூழலியலின் உயிர்ப்பையும் தக்கவைக்க நெகிழிகளின் கழிவுகளால் ஏற்படும் அபாயங்கள் குறித்து அவ்வப்போது இதுபோன்ற கட்டுரைகள் மூலம் விவாதித்துக் கொண்டாவது இருப்பது காலத்தின் கட்டாயமே.

டச்சு நாட்டைச் சேர்ந்த ஓசியன் கிளீனப் (Ocean Clean-up) என்கிற சூழலியல் ஆய்வுக் குழு பெருங்கடல்களில் கலக்கும் நெகிழி கழிவுகள் குறித்த ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன்படி உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 1.15 முதல் 2.41 மில்லியன் தொன் நெகிழி கழிவுகள் ஆறுகளின் வழியாகக் கடலில் சேர்வதாகக் அறியப்படுகின்றது.

இதில் சீனாவின் யாங்ஜி நதி முதலிடத்திலும், இந்தியாவின் கங்கை நதி இரண்டாமிடத்திலும் இருப்பதாக அந்த ஆய்வறிக்கை சொல்கிறது. உலகிலேயே மூன்றாவது நீளமான யாங்கஜி நதி ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3.3 லட்சம் தொன் நெகிழி கழிவுகளையும், இரண்டாம் இடம் பிடித்துள்ள கங்கை 1.15 லட்சம் தொன் நெகிழி கழிவுகளையும் கடலில் சேர்க்கின்றன. இத்தனைக்கும் கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கு இந்திய அரசு 3,703 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்து அதில் 2,600 கோடி இந்திய ரூபாய் வரை செலவும் செய்துதான் இந்த இரண்டாம் இடச் சாதனையை எட்டியுள்ளது ("Swatch Bharath" திட்டம் மூலம் இன்னும் பல சாதனைகளை எட்டவும் வாய்ப்புள்ளது).

உலகம் முழுவதும் ஒரு வருடத்தில் 50 ஆயிரம் கோடி நெகிழி பைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நிமிடத்திற்கும் 10 லட்சம் நெகிழி பைகள் பயன்படுத்தப்படுகிறது. மற்ற நாடுகளை விட இந்தியாவில் நெகிழி பைகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. பாண் முதல் அனைத்து பொருட்களின் விற்பனையும் நெகிழிப் பைகள் பயன்பாட்டுக்கு மாறிவிட்டன. நெகிழிப் பைகளை அழிப்பது மிகவும் கடினமானது. நெகிழி பைகள் முழுமையாக அழியக் குறைந்தது 300 ஆண்டுகளாவது ஆகும். பயன்பாட்டிற்குப் பின் குப்பைக்குச் செல்லும் நெகிழி பைகள் அழிக்க முடியாமல் பூமியின் நிலப்பரப்பில் பல இடங்களை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றன. ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளிலும் கூட மிதந்து கொண்டிருக்கின்றன.

பூமியின் நிலப்பரப்பில் கிடக்கும் நெகிழி பைகளைத் தின்று அவைகளைச் செரிமானம் செய்ய முடியாமல் பல கால்நடைகள் அழிந்து கொண்டிருக்கின்றன. பூமியினுள் மேலாகப் புதைந்து கிடக்கும் நெகிழி பைகள் மழைநீரை பூமிக்குள் செல்லவிடாமல் தடுத்து விடுவதால் நிலத்தடி நீரின் அளவும் குறைந்து கொண்டே இருக்கிறது. இதனால் வருங்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயமும் உள்ளது. நகர்ப்புறங்களில் சிறிய வகை நெகிழி பைகளில் வந்த ஷம்போக்கள், குளியலறை, கழிவறை கழுவான்கள், அசிட் போன்ற இரசாயனங்களாலும், ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளில் சேரும் நெகிழி பைகளாலும் அவை பெருமளவில் மாசடைந்து அவற்றில் வாழும் உயிரினங்கள் சிறிது, சிறிதாக அழிந்து வருகின்றன. நீரில் வாழும் சில உயிரினங்கள் இன்று முழுவதும் அழிந்துவிட்டன. இன்னும் பல அழிவை நோக்கிய நிலையில் உள்ளன. முன்பு அனைத்துக் குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் போன்ற அனைத்து நீர்நிலைகளிலும் மழை காலங்களில் தெருக்களிலும் கூட தவளைகள் அதிகமாகக் காணப்பட்டன. ஆனால் இன்று அடை மழையில் கூட அவைகளைக் காண முடியவில்லை. தவளை கத்தினால் மழை வரும் என்று கிராமத்தில் ஒரு பேச்சு உண்டு. கழிவு நீர் கால்வாய்களிலும், மர இடுக்குகளிலும் கூட வசித்து வந்த தவளைகள் இன்று தேடினாலும் கிடைப்பது அரிது. இவை சிறு பூச்சிகள், கொசுக்கள் ஆகியவற்றைத்தான் விரும்பி உண்ணும். இன்று தவளைகள் பெருமளவில் அழிந்துவிட்டதும் கொசுக்களின் எண்ணிக்கை அதிகமானதற்கும், அதனால் சிக்குன்குன்யா, டெங்கு, மலேரியா போன்ற நோய்களால் மனிதர்கள் உயிரிழப்பதும் அதிகரித்து விட்டது.

சமீபத்தில் தமிழகத்தின் முதுமலை வனப்பகுதியில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் யானைகளின் சாணக் கழிவுகளில் 60 சதவீதம் நெகிழி பொருட்களும், குளிர்பான போத்தல்களும் இருந்தமை தெரிய வந்தது. யானைகள் நகரும் இடங்களில் நெகிழி கழிவுகளை வீசும் பழக்கம் அதிகரித்ததன் விளைவாகவே யானையின் கழிவுப்பொருட்களில் நெகிழி இருக்கின்றன. இதனாலேயே யானைகள் குடல் நோய்களால் பாதிக்கப்பட்டு இறக்கின்றன.

அழகிய வண்ணங்களில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்தும் பல் துலக்கி முக்கியமான கழிவுப்பொருளோடு இணைந்து கொண்டிருக்கிறது மற்றொரு அதிர்ச்சியூட்டும் தகவல். ஆண்டொன்றிற்கு தனிமனிதர் சராசரியாகப் பயன்படுத்தும் பல்துலக்கியின் எடை சுமார் 150 கிராம் உள்ளது. இதை 138 கோடி மக்கள் பயன்பாட்டில் கணக்கிட்டால் தூக்கி எறியும் பல்துலக்கிகளின் நிறை 2.07 இலட்சம் மெட்ரிக் தொன்களாக உள்ளது. உலகம் முழுவதுமுள்ள 700 கோடி மக்கள் பயன்பாட்டுக் கணக்கில்இது 10.5 லட்சம் மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமாக இருக்கும். அன்றாட வாழ்க்கையில் இந்த நெகிழிப் பல் துலக்கிகள் ஒதுக்கித் தள்ளிவிட முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. ஆனால் அதற்காக நெகிழிப் பயன்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இதுபோல் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளது.

நம் நாட்டில் 20 மைக்ரோளுக்கு குறைவான நெகிழிக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனால், இந்த தடையை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் இன்னமும் பின்னடித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களும் நெகிழிகள் குறித்துப் பொறுப்புடன் நடப்பதாகத் தெரிவதில்லை. இதனால் நெகிழி பைகளின் ஆக்கிரமிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த நெகிழிகள் இயற்கை சூழலைப் பாதிப்பதோடு தாவரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் மனிதர்களின் ஆரோகியமான வாழ்வியல் சூழலுக்கு அச்சுறுத்தலாகி விடுகிறது.

மக்கள்தொகை அதிகரிக்க, அதிகரிக்க மதிப்புமிக்கதாக மாறும் நிலத்தில் விரைவில் குப்பைகளை அகற்றுவதற்கு இடங்களை கண்டுபிடிப்பது கடினமாகிப் போகும். அதோடு நீர் நிலைகளும் முற்றிலும் அழிந்து நீராதாரமும் நாசமாகி அனைத்து உயிரினங்களும் குடிநீருக்கே அல்லாடும் நிலை வெகு தொலைவில் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு நெகிழி கழிவுகளைக் குறைக்க முயற்சி செய்வோம். அதற்கு முதலில் ஒவ்வொருவரும் இயன்றளவு தாமாகவே முன்வந்து நெகிழி பயன்பாட்டினைக் குறைத்துக் கொள்வதும், மறுசுழற்சிக்கு உட்படுத்துவதும், நெகிழிக் குப்பைகளைப் பகுப்பாய்ந்து பிரித்து அழிப்பதும் கடமையாக மேற்கொள்ள வேண்டும். பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் சுற்றுப்புறத்தோடு தொடர்பு கொண்டே படைக்கப்படுகின்றன. எனவே மானுட சிந்தனை மேலோங்க அனைத்து உயிரிங்களின் நேசமிகு மனிதர்களாக சூழலியல் பாதுகாப்பில் சிறிதளவேனும் அக்கறையோடு செயற்படுவோம்.



## பயணம்...(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவன் ஆபிரிக்க நாட்டவன் என்பதாலோ என்னவோ எனக்கு விருப்பமில்லையென்று சொன்ன பின்னும் "தொலைபேசி இலக்கத்தைத் தாறியோ..? முகவரியைத் தாறியோ.." என்று கரைச்சல்படுத்திக் கொண்டே இருந்தான்.

இயற்கையோடு நான் ஒன்றும் போதெல்லாம் என்னைக் குழப்புவதி லேயே குறியாக இருந்தான். அவனைத் திசை திருப்ப எண்ணி, வெளியிலே தாயின் கையைப் பிடித்த படி செல்ல நடை போடும் ஒரு குழந்தையைக் காட்டி "அந்தக் குழந்தையைப் பார்த்தியா? எவ்வளவு அழகாக இருக்கிறாள்?" என்றேன். உண்மையிலேயே அந்தக் குழந்தை துறுதுறுத்த கண்களுடன் துடிப்பாய் தெரிந்தாள். கன்னத்தைக் கிள்ளிப் பார்க்க வேண்டும் போல ஆசை வந்தது. ஆனால் அவனால் அக் குழந்தையிடம் லயிக்க முடியவில்லை. என்னைச் சம்மதிக்க வைப்பதிலேயே மும்முரமாக இருந்தான்.

எனது இன்றைய தனித்த ரெயில் பயணத்தில், ஏகாந்தமாய் இருக்கலாம் என்ற என் இனிமையான நினைப்பு தொலைந்து வெகு நேரமாகியிருந்தது. 'இதற்கு மேலும் தாங்காது வேறு எங்காவது போய் இரு.' என்று மனசு சொல்லியது. எரிச்சலோடு எழுந்து பார்த்தேன். எல்லா இருக்கைகளுமே நிரம்பி வழிந்தன. பரவாயில்லை, ஏதாவதொரு மூலையில் போய் நிற்பது உத்தமமெனத் தீர்மானித்த படி எனது கைப்பையையும், கொப்பியையும், பேனையையும் எடுத்துக் கொண்டு அவனைத் தாண்டி நடந்தேன்.

"கோ..லா, எங்கை போறாய்..?"

"அங்காலை போய் இருக்கப் போறன்."

"ஏன்..?"

நான் பதில் சொல்லவில்லை. விரைந்து நடந்தேன்.

இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. வெளிச் செல்வதற்கான கதவோடு அண்டிய ஒரு மூலையில் போய் நின்று எனது கொப்பியைப் பார்த்தேன். அது எதுவுமே எழுதப்படாமல் வெறுமையாக இருந்தது.

நேரத்தைப் பார்த்தேன். ம்... இன்னும் சில நிமிடங்களில் ஸ்ருட்கார்ட் வந்து விடும். ஏமாற்றத்தின் நடுவே ஒரு நிம்மதிப் பெருமூச்சு.

## புலி பாய்ந்த தவளை...(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலுக்காக வரவழைக்கப் பட்டிருந்தார். இவரின் தலைமையின் கீழேயே கிழக்குப் போராளிகள் பூநகரியில் தாக்குதலை நடத்தியிருந்தனர். பின்னாளில் அரசியல்துறைக்குப் பொறுப்பாளர்க ளாக இருந்த தமிழ்ச்செல்வன், தமிழினி ஆகியோரும் இந்தத் தாக்குதலில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1993 நவம்பர் 10 ஆம் நாள் நள்ளிரவு. யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் வழியாக பூநகரியை நோக்கி நகர்ந்திருந்தனர். கடும் மழையும் காற்றும் சேறும் அவர்களின் நகர்வை தாமதப்படுத்தியது. போர்க் களத்துக்கு சாதகம் இல்லாத நிலையிலும் புலிகளின் நகர்வு தொடர்ந்தது. மாவீரர் நாள் நெருங்குகையில் புலிகளின் தாக்குதல் இருக்கும் எனப் படையினர் எதிர்பார்த்திருந்தனர். இதனால் புலிகள் தாக்குதலைத் தொடர்ந்ததும் பலமான எதிர் மோதல் வெடித்தது. புலிகளின் ஓர்மத்தின் முன்னால் சிங்களப் படையால் நிற்க முடிய வில்லை. நான்கு நாட்களே நீடித்த தாக்குதலில் சுமார் ஆயிரம் வரையிலான இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். புலிகளின் தரப்பில் 458 பேர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். ஆனால் இராணுவம் தம் தரப்பில் 600 பேர் கொல்லப் பட்டனர் என்றும் 200 பேரைக் காணவில்லை என்றும் அறிவித்திருந்தது.

பூநகரிப் படைத்தளத்தை முழுமையாகக் கைப்பற்றிய புலிகள் ஒரு டாங்கியை அழித்ததுடன் ஒரு டாங்கியை (120 மி.மீ) கைப்பற்றினர். ஈழப்போராட்டத்தில் முதன்முதலாக புலிகளால் டாங்கி கைப்பற்றப்பட்ட சம்பவம் இதுவே. 5 விசைப்படகுகள், 50 கலிபர் துப்பாக்கிகள், ஏராளமான கனகர, இலகுரக ஆயுதங்களைக் கைப்பற்றி மீண்டனர். புலிகள் விட்டு வந்த தேசத்தில் இந்தத் தாக்குதலின் பின்னர் கிளாலிக் கடலை எட்டியும் பார்க்கவில்லை கடற்படை. யாழ். இடப்பெயர்வின் போதும் மக்கள் மீது படகுகளில் வந்து தொல்லை கொடுக்க கடற்படை அஞ்சி நின்றது.

## தலைவனின் தம்பி...? (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலீபன், சங்கர் போன்ற அரசியல் முதிர்ச்சி மிக்கவர்களின் மரணம் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தது. எனவே காயமடைந்திருந்த தினேஸ் களத்தில் இருந்து அகற்றப்பட்டு, அரசியல்துறைப் பொறுப்பாளராக தலைவரால் நியமிக்கப்படுகின்றார். அதன் பின்னர் தினேஸ் - தனது சொந்தப் பெயரான தமிழ்ச்செல்வன் என்ற பெயரையே பயன்படுத்து கிறார். அரசியல்துறைப் பொறுப்பாளராகும் முன்னர், யாழ். மாவட்டப் பொறுப்பாளராக தன்னை நிரூபித்திருந்தார். மருத்துவப் போராளிகளின் பிரிவை உருவாக்கியதில் இவரின் பங்களிப்பே காத்திரமானது. இதேபோன்று, சுதந்திரப் பறவைகள் (பெண்கள்) அமைப்பின் உருவாக்கத்திலும் தமிழ்ச்செல்வனின் பங்களிப்பு இருந்தது.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சில்தான், அரசியல்துறைப் பொறுப்பாளராக தமிழ்ச்செல்வன் பங்கேற்றார். இதில் பெற்ற அனுபவமே பின்னாளில் நடந்த சமாதானப் பேச்சுக்களில் அவருக்கு உதவியது. மதியுரைஞர் அன்ரன்பாலசிங்கம் நோயில் வீழ்ந்த போது பேச்சுக்கு புலிகளின் தரப்பில் தலைமை தாங்கியதும் தமிழ்ச்செல்வனே. தட்ட வேண்டிய இடத்தில் தட்டுவது என்பார்களே அது இவருக்கு கைவந்த கலை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யவேண்டும். விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் எப்படி உதவ வேண்டும். அபிவிருத்தித் திட்டத்துக்கு எப்படி, எந்தப் பகுதிக்கு பங்களிக்க வேண்டும் என்பதை எல்லாம் தமிழ்ச்செல்வனே முடிவெடுத்தார். (இதனால்தான் இன்று எதை, எப்படி, எவ்வாறு செய்யவேண்டும் - முன்னெடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுமாறுகிறதோ தெரியவில்லை.)

சூரியக் கதிர் நடவடிக்கை மூலம் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் போராளிகளை நிறுத்தி அவர்கள் மூலம் பல இரகசிய நடவடிக்கைகளை நடத்த தமிழ்ச்செல்வனே காரணமாக இருந்தார். யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் - சிவில் கட்டமைப்பு-களை ஏற்படுத்த முயன்றபோதும், தமிழ்ச்செல்வனின் அனுமதியின்றி அவர்களால் துரும்பைக்கூட அசைக்கமுடியவில்லை. பிரபல ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் 'என் எழுத்தாயுதம்' நூலில் இதுபற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் மயப்பட்ட அரசியலை உருவாக்குவதிலும், வறுமையாலும் போசாக்குக் குறைபாட்டாலும் மெலிந்து கொண்டிருந்த குழந்தைகளை மீட்டெடுக்கும் நடவடிக்கையை தொடங்கினார். யாழ்ப்பாணத்தை விட்டு, மக்களும் புலிகளும் வெளியேறிய பின் வன்னி பெரும் இடர்களை சந்தித்தது. காடுகள் ஊடாக ஊடுருவிய படையினர் மக்களை வெட்டிக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றனர்.

பெருநிலப்பரப்பைக் காப்பாற்றப் போதிய ஆளணி புலிகளிடம் இருக்கவில்லை. காரணம் தொடர்ந்து நடந்த படையெடுப்புகளில் ஏற்பட்ட உயிரிழப்புகளும், காயப்பட்டு களத்தில் இருந்து அகற்றப்பட்ட-வர்களும் அநேகம் பேர் இருந்தனர். இதனால் மக்கள் படைக் கட்டுமான-த்தை ஏற்படுத்தி துணைப்படைகள் உருவாக்கப்பட்டன. மக்களும் எதிரியை எதிர்க்கும் விதத்தில் போர் வலுக் கொண்டவர்களாக பயிற்சி எடுத்தனர். இதற்கு அடித்தளமிட்டவர் தமிழ்ச்செல்வனே.

நூல்கள் பற்றிய தேடலும் படிப்பதற்கான வேட்கையும் கொண்டிருந்தார் தமிழ்ச்செல்வன். தினமும் 4 -5 மணி நேரமே தூங்கும் பழக்கம் கொண்ட அவர், எவரின் முன்பாகவும் உற்சாகம் குன்றியோ, சோர்வடைந்தவராகவோ, குழப்பமுடையவராகவோ இருந்ததில்லை - காட்டியதில்லை. போர்க் களங்களில் நடக்கும் கதைகளை சிரிப்புக் கதைகளாக்கி போராளிகளுக்கு உற்சாகமூட்டுபவராக இருந்தார். அரசியல் விடயத்தில் ஞானியாக நடந்தார். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணச் செய்வதற்காக தந்திரங்களை வகுத்து இராஜதந்திரியாக செயற்பட்டார். போர்க் களத்தில் வீரச்சாவடைதில்-தான் பெருமையடைகிறேன் என்றவர் 2007 நவம்பர் 02 ஆம் நாள்விமானத் தாக்குதலில் மரணமானார்.

இந்த தாக்குதலில் தமிழ்ச்செல்வன் எங்கு சென்றாலும் கூடவே சென்று, களமாடி அவன் உயிர் காத்த லெப்.கேணல் அன்புமணி, மேஜர் செல்வம், மேஜர் மிருதன், மேஜர் கலையரசன், லெப். ஆட்சிவேல், லெப். மாவைக்குமரன் ஆகியோரும் சாவைத் தழுவினர். சாவு அவர்கள் விரும்பாத விதத்தில் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் தமிழர்களும் இருக்கவில்லை. தலைவரும் இருக்கவில்லை. இதனால்தான் தலைவர் பிரபாகரன் 2007 மாவீரர் நாள் உரையில் ' மறைந்த மாவீரருக்கு ஆண்டுதோறும் விளக்கேற்றும்போது எப்போதும் என்னருகிருந்த எனது அன்புத்தம்பி தமிழ்ச்செல்வனுக்கும் சேர்த்து இம்முறை என்கையால் ஈகச்சுடரேற்றும் நிலைமையைச் சர்வதேசம் உருவாக்கியிருக்கிறது." என்று சாடியிருந்தார்.

அன்று தலைவனின் தம்பியாக - மக்களின் புதல்வனாக - இளைஞர், யுவதிகளின் அண்ணன் தமிழ்ச்செல்வனை அழித்த சர்வதேசம். இன்று அவன் நேசித்த வாழ்ந்த இனத்தையே வேரறுக்க நிற்கிறது. அவனைப் பற்றி வளர்ந்த அரசியல்வாதிகள் இன்று காட்டுக் கொடிகளாகி தங்கள் இனத்தின் கழுத்தையே நெரிக்கின்றன. ஆனால் அவன் நேசித்த இனம் மட்டும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறது தலைவனும் அவன் நேசித்த தம்பியும் தமக்காக மீண்டும் வருவார்கள் என்று... ஓர் இனத்தின் காத்திருப்பு பொய்க்குமா...?



# நடக்கப் போகிறார் நடராஜா

– உமா சந்தோஷ்

நவீன நகைச்சுவைத் தொடர் 21

'கவலைப்படாதை. ஒரு வேலை இருக்கு முடிச்சிட்டு உடனை வருவன்." என்று வேலைக்காரியைத் தேற்றினார் நடா. மறுநாள் மதியம் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ் ட்றெயினிலை போறதாக ஏற்பாடு.

கந்தர் மடத்திலுள்ள எல்லோரும் நடாவுக்கு சினேகிதரானதால் எல்லோருக்கும் 'போட்டுவாறன்' என்று சொல்ல வேண்டிய தேவை இருந்தது.

இரவு எல்லோரும் ஒருமித்துச் சாப்பிட வேணும் என்று ஏற்பாடு. நடாவுக்குப் பிடித்த வகையில் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டது. பிட்டும் மீன் குழம்பும், கத்திரிக்காய், வெங்காயப் பொரியல். கிழங்கு பிரட்டல் கறி எல்லாம் வகைவகையாக மேசையை நிரப்பியிருந்தன. எல்லாவற்றையும் பார்க்க நடாவுக்கு பரம சந்தோஷம். ஆறுதலாக மெல்லச் சாப்பிட வேண்டும் என்பது நடாவின் ஆசை. நடா தனது கஸ்டம்ஸ் காலத்துப் பகிடிகளைச் சொல்ல எல்லோரும் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனர். வலு சுவாரஸ்யமாக நாள் கழிந்தது.

மறுநாள் காலையிலிருந்து ஒரே ரென்சன். 'நீங்கள் ஒரே ரென்சன் பார்ட்டி அப்பா. எடுத்ததெல்லாம் சரியோ எண்டு பாருங்கோ? ' என்றாள் நடா மனைவி. அதற்கிடையில் நடா மனைவி முட்டை மாவும், ஒடியல் மாவும் பார்சல் பண்ணிக் கொண்டு வந்து விட்டாள்.

மறு நாள் மத்தியானம். கந்தர் மடமே கலகலப்பானது. கார் வந்து நின்றது. பெட்டி படுக்கையள் எல்லாவற்றையும் ஏற்றி விட்டு ஒரு முறை சரிபார்த்துக் கொண்டார். நடா கலகலப்பாக இருந்தார். நடா எல்லோருக்கும் முத்தம் கொடுத்தார். முற்றத்தையும் முத்தமிட்டார். காருக்குள் போய் ஏறத் தாமதித்தவராய் வீட்டையே சுற்றி வந்தார். கொழும்புக்குப் போக மனமில்லாதவராய் நடா பிகு பண்ணியதுபோல இருந்தது. 'வாங்கோ அத்தான். நேரம் போச்சுது' என்று டொக்டர் மச்சாள் சத்தம் போட, மகுடிக்கு அடங்கின பாம்பு போலப் போய் ஏறினார் நடா. ஸ்ரேசனில் ஒரே சனக் கூட்டம். நடாவுக்கு அறிந்த பலர் கொழும்புக்குப் போவதற்காக அங்கு வந்திருந்தனர்.

ட்றெயின் வரவும் எல்லோரும் ஓடி ஏறினார்கள். நடாவும் ஏறிவிட்டார். நடாவும் மனைவியும் தங்கள் பழைய கதைகளை எல்லாம் கதைத்துப் பொழுது போக்க ட்றெயின் தன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது.

ட்றெயினுக்குள் சாப்பிடுவதற்கு விதம் விதமதாகச் சிற்றுண்டிகளை எல்லோரும் செய்து கொடுத்திருந்தனர். ஒவ்வொன்றாக ருசித்தனர். 'என்னப்பா அண்டைக்கு எங்களை நல்லாப் பயப்பிடுத்திப் போட்டியள் என்ன?" என்றார் நடா மனைவி. 'போடி விசரி. நான் என்ன செத்துப் போவன் எண்டு நினைச்சியேடி. நான் உனக்குக் கட்டின தாலி வலு ஸ்ரோங்க் எண்டு தெரியாதே! என்ன?" என்று நகைச்சுவையாகப் பேசினார் நடா.

'சரி கள்ளி அண்டைக்கு என்னைச் சரியா ஏமாத்திப் போட்டாய் என்ன? எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டு படுத்திருந்தனான்.' என்றார் நடா. ' என்ன சொல்லுறியள். தங்கச்சி வர விட்டால் தானே? அண்டைக்குப் பாத்துப் பல பழைய கதையளை அவ இழுத்து வைச்சுக் கொண்டு கதைக்கிறாள்' என்று சமாளித்தார்.

அனுராதபுர ஸ்டேசனைத் தாண்டி ட்றெயின் ஓடிக்கொண்டிருந்தது. பாத்றூமுக்குப் போறனென்று போன நடாவை நீண்ட நேரமாகக் காணவில்லை. பதைபதைத்த நடா மனவி ட்றெயினின் வேகத்தில் தள்ளாடியபடி நடாவைத்தேடிப் நடந்து போனாள். அங்கே பாத்றூமில் நடாவைக் காணவில்லை. மனம் இன்னும் பதைபதைக்க அடுத்த கொம்பாட்மெண்டில் போய் தேடினாள். அங்கிருந்து பார்த்தால் நடா ரெஸ்ரோறன்ட் வண்டிக்குள் இருப்பது தெரிந்தது. அவர் தனது கஸ்டம்ஸ் நண்பரான பியசேன குடும்பத்துடன் கதைத்துக் கொண்டிருந்தார். பதைபதைத்துப் போய் வந்த நடா மனைவிக்கு அவர்களைப் பார்க்க எரிச்சலாக வந்தது. இருந்தும் சமாளித்தபடி சிரிப்புடன் அவர்களை நெருங்கினார்.

நடாவின் மனைவிக்கும் ரீ ஓன்றை ஓடர் பண்ணினார் பிய சேன. அநுராதபுர பௌத்த விகாரையில் ஒரு பூஜைக்காக வந்திருந்த பியசேன கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருந்ததனர். பியசேன ஒரு பகிடிக்காரன். அதனால் நேரம் போனது தெரியவில்லை. நீண்ட நேரத்துக்குப் பின்னர் தமது இருப்பிடத்துக்கு வந்தனர் நடாவும் மனைவியும்.

மாலையானதும் நடாவுக்கு சற்று கண்ணயரத் தொடங்கியது. மனைவியின் தோளில் சாய்ந்தார் நடா. இப்படி அவர் சாய்ந்து பல நாளாகிவிட்டதை நினைவு கூர்ந்தார் நடா மனைவி. அவளுக்கும் மனம் இதமாக இருந்தது. நடாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள். ஒரு குழந்தைபோல நடா உறங்கிக் கொண்டிருந்தார்.

உண்மையில் நடாவை சில காலம் விட்டு விட்டு தனியே கொழும்பில் இருக்க முடியாது இருந்ததாலேதான் புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தாள் அந்தக் கதை யாருக்கும் தெரியாது.

இளவயதுத் தாம்பத்தியத்தைக் காட்டிலும் முதிர்வில் வருவது மிகவும் மகிழ்ச்சியானது. அதிகம் கிடைக்கின்ற ஆய்வுகளில் பழையதை இரை மீட்டுப் பார்ப்பதில் கிடைக்கும் சுகம் பெரியது. நடாவினதும் அவரது மனைவியினது வாழ்க்கையும் விசித்திரமானது. மற்றவர்களது வாழ்க்கையில் இருக்கக் கூடிய பெரிய பிரச்சினையான பணம் அவர்களிடம் தாராளமாக இருந்தது. வசதியான வாழ்க்கைக்குக் குறைவில்லை. எத்தனையோ தடவைகள் நடா மனைவி புடவை வாங்கிக் கொள்வதற்காக மட்டும் இந்தியா போய் வந்திருக்கிறாள். அவர்களுக்கு இந்தியா போய் வருவதென்பது யாழ்ப்பாணம் வந்து போவதை விடச் சிரமம் குறைந்த காரியம்.

புகழுக்கும் குறைவு இல்லை. தென்னிந்தியாவிலுள்ள பெரிய பிசினெஸ்காரர் மட்டுமல்ல சினிமா உலகத்தவர்கள் பெரும்பாலானவர்கள் நடாவுக்கு பொக்கெற் பிரண்ட்ஸ். எனவே சுக போகத்தை அனுபவித்தவர் நடா. பொன்னுக்கு எப்படிக் குறைவில்லையோ அப்படி பெண்ணுக்கும் குறைவில்லாது அவர் வாழ்க்கை நகர்ந்தது.

போய் இறங்கியதும் பெரிய வேலை நடா மனைவிக்குக் காத்திருந்தது. நடா சுகமில்லாமல் ஆஸ்பத்திரியில் இருந்தவேளை அவருக்காக இரண்டு, மூன்று நேர்த்திக் கடன்களை வைத்திருந்தாள். அத்துடன் நடாவைப் பல காலம் மிஸ் பண்ணிய நண்பர்களெல்லாம் வருவினம். அது மட்டுமல்ல பேரன் ஒருவனின் பிறந்த நாளைக் கொண்டாட மகள் லண்டனில் இருந்து வருவதாகவும் போன் பண்ணியிருந்தாள். எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வருவதாக இருந்தது.

(தொடரும்)

## என் இளைஞனே!

வந்தவரை வாழவைக்கும்
தமிழகம் என்று சொல்லிச் சொல்லியே
அடுத்தவனிடம் நாட்டை
கொடுத்துவிட்டோம்

என் இளைஞனே!
நீ நடிப்பவனை வாழவைத்து
கொண்டு இரு

கட்டவுட் வைத்து பால் ஊற்றி
கொண்டாடும் இளைஞர்களே!

எம் விவசாயி விளைநிலத்தில்
மடிகின்றான் நீங்கள் தல தளபதி
படத்திற்கு வெறியோடு பால்
ஊற்றுகிறீர்கள்

நடிகனை நடிகனாக மட்டும்
பாருங்கள் அவன் நடிப்புக்கு மட்டும்
பாராட்டுங்கள் வழங்குங்கள்

ஒரு நடிகன் மீது கொண்ட
வெறியை உன் தாய் தமிழ் மீது
வை இளைஞனே!

எம் இனத்தவனை
கன்னத்தில் அடித்தும்..,

உன் பாரத நாட்டிலே
தவித்த வாய்க்குத் தண்ணீர் தராமல்
தமிழனுக்கு மூத்திரம் தருகிறேன்
என்றான் கர்நாடக காட்டான்
அப்போது எங்கே போனது உங்கள்
வெறி

பாலுக்கு அழும் குழந்தைகள்
ஆயிரம் அவர் உங்கள் கண்ணில்
படவில்லையா

பசியால் அழும் குழந்தைகள்
ஆயிரம் அவர்களுக்கு இந்த
உதவியை செய் நீ பிறந்த பலனை
அடைவாய்

நடிப்பவன் சொல்லுகிறானா
என் படத்திற்கு பால் ஊத்து இல்லை என்
படத்திற்கு ஆடு வெட்டி இரத்தப் பலி குடு
என்று

இல்லாவிடின்
என் படத்தை தூக்கிக்கொண்டு ஊர்வலம்
வா என்றுதான்
சொல்லுகிறார்களா...?

உன் வீட்டு தந்தை தாய்க்கு
செய்யும் கடமைகளை செய்

நடிபவனுக்கு பல கோடி சம்பளம்
நடிப்பவன் நடித்து விட்டு
நிம்மதியாக இருக்கிறான் நீங்கள் தல
தளபதி என்று
சண்டை பிடிக்கிறீர்கள்
சமுக வலைத்தளங்களில்

இனியேனும் திருந்துங்கள்
இளையோர் நாட்டை வளர்க்கவே
தவிர நடிகரை அல்ல

என் இளைஞர்களே உங்களை
ரசிகர்களாய் இருக்க
வேண்டாமென்றவில்லை
இயன்றவரைவெறியர்களாக
இராதீர்கள்..

**–நிதா கரன்**
**–மகிழடித்தீவு**
**–மட்டக்களப்பு**




— நா. யோகேந்திரநாதன் —

# நீந்திக் கடந்த நெருப்பாறு

மெல்ல மெல்லக் கிழக்கு வெளித்துக் கொண்டிருந்த அதிகாலைப் பொழுதில் வேலிக்கரை வேம்பில் ஒரு குச்சியை முறித்து பற்களைத் தீட்டியவாறே தென் கிழக்குப் பக்கமாக காட்டு மரங்களுக்கு மேல் தெரிந்த வானத்தைப் பார்த்தார் பரமசிவம் அண்ணாவியார். அது வழமை போலவே மங்கலான ஒரு நீல நிறத்திலேயே படர்ந்து கிடந்தது. ஆனால் மெல்ல மெல்ல அது செந்நிறமடையும் போதே சூரியன் உதிக்கும் என்பதையும் காட்டு மரங்கள் செவ்வண்ணம் படரும் என்பதையும் அவர் அறிவார். ஆனால் தென்கிழக்குத் திசையின் பற்றைகளும், மரங்களும் அடர்ந்த நிலப்பகுதி சூரியனின் வரவின் பல மணி நேரம் முன்பே கொட்டப்பட்ட குருதியால் சிவந்துபோயிருக்கும் என்றே அவர் கருதினார். முள்ளிக்குளம் பக்கமாக இரவு இரண்டு மணியளவில் தொடங்கிய தொடர் எறிகணை வீச்சு அதிகாலை ஐந்து மணிக்குத்தான் ஓய்ந்தது.

நடுக்காட்டுக்குள் போகும்போது பல்லாயிரக்கணக்கான சில் வண்டுகள் ஒரே நேரத்தில் ரீங்காரம் செய்துவிட்டு திடீரென அத்தனையும் ஒரே நேரத்தில் நிறுத்திவிடும். அப்போ ஏற்படும் ஒரு நிசப்தம் எந்த ஒரு அனுபவசாலியையும் சில விநாடிகள் இனம் புரியாத பயத்திற்குள் தள்ளிவிடும். பரமசிவத்தைச் சுற்றியும் எறிகணைச் சத்தங்கள் ஓய்ந்த பின்பு அப்படிஒரு அமைதி தான் நிலவியது. சில நாட்களாக விடிகாலையில் துயிலெழுப்பும் புள்ளினங்களின் கலகலப்புக் கூடக் காணாமற் போய்விட்டது. காட்டு மரங்களின் இலைகள் கூடத் தமது அசைவுகளை நிறுத்திவிட்டது போலவே தோன்றியது.

அவர் கிணற்றடியில் போய், வாய் கொப்பளித்து முகத்தைக் கழுவி விட்டு நிமிர்ந்த போது, "அம்பா.." என்ற செங்காரிப் பசுவின் கத்தல் ஒலி காதில் விழுந்தது. அது பால் கறக்கும் நேரம் நெருங்கி விட்டதை அவருக்கு அறிவிக்கும் அழைப்பு மணி. "வாறன் பொறு!" என்று அதைப் பார்த்து உரத்துக் கூறிவிட்டு தோளில் கிடந்த துண்டால் முகத்தைத் துடைத்து விட்டு, அடுக்களைப் பக்கம் சென்று செம்பை எடுத்துக் கொண்டு வந்தார். செம்பில் நீரை எடுத்துக் கொண்டு கன்றை அவிழ்த்து விட்டார். அது துள்ளிக்குதித்து ஓடி தாயின் மடியில் பால் குடிக்கத் தொடங்கியது. கன்றைப்பிடித்து மாட்டுக்கு முன்பாகக் கட்டிவிட்டு, கொண்டு வந்த நீரால் மடியை நன்றாகக் கழுவிவிட்டுப் பாலைக் கறக்க ஆரம்பித்தார். செங்காரியும் கன்றை இதமாக நக்கிக் கொடுத்தவாறே நின்றது.

ஏனோ வழமையை விட அன்று பால் குறைவாகவே கிடைத்தது. இரவு கேட்ட எறிகணை ஒலிகள் மாட்டில் கூட பாதிப்பை ஏற்படுத்தி விட்டதோ என அஞ்சினார். கன்றை மீண்டும் அவிழ்த்து விட்டுவிட்டு பாலைக் கொண்டுபோய் மனைவியிடம் கொடுத்தார். மனைவி பார்வதி "தேத்தண்ணி ஊத்தட்டே?", எனக் கேட்டாள் "இண்டைக்கு என்ன கிழமை.. திங்களல்லே! குளிச்சிட்டு அம்மனுக்கு விளக்கு வைச்சுப்போட்டு வாறன்" என்றுவிட்டு கிணற்றடியை நோக்கி நடந்தார் பரமசிவம். அவர் காத்தவராயன் கூத்து ஆடத் தொடங்கிய காலத்திலிருந்து, காணியின் ஒரு மூலையில் ஒரு கொட்டில் போட்டு ஒரு சூலமும், முத்துமாரியம்மன் படமும் வைத்து ஒவ்வொரு திங்களும் விளக்கு வைத்து வந்தார். தனது திறமைக்கும் குரல் வளத்துக்கும் முத்துமாரியம்மன் அருளே காரணம் எனத் திடமாக நம்பினார். அவர் விள்க்கு வைத்துவிட்டு வர, பார்வதி தேநீர் ஊற்றி தயாராக வைத்திருந்தாள். அவர் குடித்து, முடித்ததும் போத்தலில் நிறைத்து வைத்திருந்த பாலை அவரிடம் நீட்டினாள்.

"முத்தையா.. பாலுக்குப் பாத்துக் கொண்டிருப்பான்.. நான் கடையடிக்குப் போட்டுவாறன்.. தம்பிய பட்டியத் திறந்து, மாடுகளக் கொண்டுபோய் தரவையில விட்டிட்டு, தோட்டத்துக்கு வரச் சொல்லு! நான் அங்க வருவனாம் எண்டு விடு" என்று விட்டு பால் போத்தலைக் கையில் வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

பாலம்பிட்டியில் உள்ள ஒரே தேநீர் கடை முத்தையா கபே' மட்டும்தான். அதை கடை என்று சொல்வதை விட அரசியல் மேடை என்று சொல்வதே பொருத்தமாயிருக்கும். நாட்டு நடப்புக்கள் முதற் கொண்டு அரசியல் ஆய்வுகள் வரை அரங்கேறுவது அங்கு தான். முதலில் எந்தச் செய்தியும் அந்த மையத்துக்கே வந்து சேரும். பின்பு அது அங்கிருந்து ஊரெல்லாம் பரவிவிடும். பரமசிவம் கடையடிக்குப் போனபோது முத்தையாவின் பால் தேநீருக்காக இரண்டு மூன்று பேர் காத்திருந்தார்கள். முத்தையா பரமசிவத்தைக் கண்டதும் ஓடிவந்து பாலை வாங்கி மண் சட்டியில் ஊற்றிச் சுடவைத்தான். பரமசிவம் வாங்கின் ஒரு கரையில் அமர்ந்தவாறே "இரா முழுவதும் ஒரே செல் சத்தமாய்க் கிடந்தது. என்ன நடந்ததோ தெரியேல்ல" என்றார். "அதண்ணை... முள்ளிக் குளத்துக்கை ஆமி இறங்கீட்டாங்களாம்.." என்றான் கந்தசாமி. பரமசிவம் திகைப்புடன், "என்ன.. இறங்கீட்டானோ...? ஆர் சொன்னது...?" எனக் கேட்டார்.

"இப்ப தான் பாண் கொண்டுவாற பொடியன் சொல்லிப் போட்டுப் போறான்" பாண் கொண்டுவரும் பொடியன் சொன்னால் அதில உண்மை இருக்கும் என்றே பரமசிவம் நம்பினார். அது மட்டுமன்றி இராணுவம் ஒரு நகர்வை மேற்கொள்வதற்கு முன்னால் அப்பகுதியை நோக்கி சரமாரியாக எறிகணை வீச்சை நடத்துவதும் வழமை தான். இரவு கேட்ட தொடர் எறிகணை ஒலிகள் அப்படியான ஒரு நகர்வின் அறிகுறியாக இருக்குமென்றே அவர் நம்பினார். ஆனால் அவரின் மகன் சங்கரசிவம் முள்ளிக்குளம் களமுனையில் தான் நிற்கிறான் என்பதை நினைத்தபோது நெஞ்சு ஒரு முறை நடுங்கியது. சொந்த மண்ணைக் காக்க ஒவ்வொருவரும் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதில் அவர் எப்போதுமே உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆனால் மகனுக்கு ஏதாவது நடந்தால் என்று நினைக்கும் போது மனம் சங்கடப்படுவதை தவிர்க்க முடியவில்லை.


"எங்கட பொடியள் என்னண்டு அவங்களை முன்னேற விட்டாங்கள் எண்டுதான் தெரியேல்ல" என்றான் கந்தசாமி. "ம்.. சண்டையெண்டால் முன்னேறுவதும் பின் வாங்கிறதும் நடக்கிறது தானே..." என்று விட்டு வெறும் போத்தலையும் வாங்கிக் கொண்டு அவசரவசரமாக வீடு நோக்கிப் புறப்பட்டார் பரமசிவம். வீட்டு முற்றத்தில் நின்றவாறே "இஞ்சரப்பா... நான் ஒருக்கால் மடுப்பக்கம் போட்டு வாறன்" என்றார். "ஏன் இப்ப மடுவுக்கு... இளையவனல்லே தோட்டத்தில நீங்கள் வருவியள் எண்டு பாத்துக் கொண்டு நிப்பான்" "ஓ.. நீ போய் அவனுக்கு உதவி செய்... முள்ளிக்குளத்தில சண்டையாம்... மடுப்பக்கம் போனால் தான் விபரம் தெரியும்" அதைக் கேட்டதும் "ஐயோ.. பெரியவன் முள்ளிக்குளத்திலையல்லே" என அங்கலாய்த்தாள் பார்வதி.

"அது தான் என்னண்டு போய் அறிஞ்சு கொண்டு வாறன்" என்றுவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் பரமசிவம். காயப்பட்ட போராளிகளையும் வீரச்சாவடைந்த போராளிகளையும் முதலில் பெரிய பண்டிவிரிச்சானில் இருந்த மருத்துவ முகாமுக்கு கொண்டு வருவார்கள். பெருங்காயம்பட்டவர்களைப் பின்பு இலுப்பைக்கடவைக்கோ கிளிநொச்சிக்கோ கொண்டு போவதுண்டு. எனவே மடுவிற்குப் போனாலே களநிலைமை பற்றி அறிந்துவிடலாம் என அவர் நம்பினார்.

இராணுவம் ஒரு நகர்வை மேற்கொள்வதற்கு முன்னால் அப்பகுதியை நோக்கி சரமாரியாக எறிகணை வீச்சை நடத்துவதும் வழமை தான். இரவு கேட்ட தொடர் எறிகணை ஒலிகள் அப்படியான ஒரு நகர்வின் அறிகுறியாக இருக்குமென்றே அவர் நம்பினார். ஆனால் அவரின் மகன் சங்கரசிவம் முள்ளிக்குளம் களமுனையில் தான் நிற்கிறான் என்பதை நினைத்தபோது நெஞ்சு ஒரு முறை நடுங்கியது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# குறும்படங்கள் ஒரு பார்வை



– ஜி.ரி.கேதாரநாதன் –

நெறியாளர் ஒருவர் நல்லதொரு திரைக்கதையை வடிவமைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். எழுத்தின் நீட்சியாக (திரைக்கை-தயின்) நெறியாளுகை இருத்தல் வேண்டும். இந்த வகையில் பரஸ்பரம் எழுத்து மற்றும் நெறியாள்கை இரண்டிலுமே படைப்பாளிகளுக்குரிய பண்புகள், குணாம்சங்கள் கூர்மையாக வெளிப்பட ஏதுவாகும். சாதாரண மனிதர்கள் உணர்ந்து வெளிப்படுத்துவதற்குச் சாத்தியமற்ற உணர்வு நிலைகளைச் செம்மைப்படுத்திச் செதுக்கி, அதற்கான திடமான உருவம் கொடுத்து இயலுலகில் பாத்திரங்களாக உலாவவிடும் ஆற்றல் வாயந்தவராக நெறியாளர் தன்னை வெளிக்கொணர வேண்டும். இந்த வகையில் நெறியாளர் என்ற ரீதியில் படைப்பின் (குறும்படத்தின்) சகல கூறுகளிலுமே அசாத்தியமான கட்டுப்பாடுடன் அவர் இயங்க வேண்டும். திரைப்படைப்பு ஆற்றல் வாய்ந்த குழுவின் பங்களிப்புடன் கூட்டு முயற்சியாக இறுதி வடிவத்தை எட்டுகின்ற போதிலும் நெறியாளரே சகல கூறுகள் தொடர்பிலும் தீர்க்கமான முடிவும் கட்டுப்பாடும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.


குறும்படத்தின் கட்டுப்பாடு, சிக்கனம், கலைநேர்த்தி, நேர எல்லை போன்றவற்றில் பிசகக் கூடாது. ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கதாபாத்திரங்களின் கதையாக பெருப்பித்து விடக்கூடாது. குறும்பட மென்பதால் கதைக்குள் கிளைக்கதை என்பன தவிர்க்கப்பட்டு விடயப் பரப்பு எல்லை ஒடுங்கியதாக இருக்க வேண்டும். உரையாடல்களையும் குறைத்து, உணர்வுகளையும் காட்சிப்படிமங்களின் மூலம் வெளிப்படுத்த முற்பட வேண்டும். குறும்படத்திற்கான பின்னணி இசை, சம்பவங்கள் மற்றும் வியாபிக்கும் தன்மைகளுக்கு ஏற்ப மாறுபட்டுப் பொருத்தமாக ஒலிக்க வேண்டும். அதற்காக ஆரம்பத்திலிருந்து முடிவு வரை பின்னணி இசையைப் பயன்படுத்தக் கூடாது. இடையே மௌனங்கள் அவசியம். பாடல் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். ஒட்டு மொத்தமாக வாழ்வை மிக நெருக்கமாக மெய்மை உணர்வுடன் பார்வையைச் செலுத்த நெறியாளர் முயல வேண்டும். இந்த வகையில் அவரின் தனித்த கூர்மையான பார்வையின் பாற்பட்டதே சினிமா அழகியலாகும். குறும்படத்தின் ஆதார சுருதி இங்கிருந்தே ஆரம்பிக்கிறது.

a gun and a ring (ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும்)

யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் இளவயதிலேயே குடியேறிய தமிழரான லெனின் எம்.சிவத்தின் கதைப்பாங்கான (feature film) கனடிய தமிழ்த் திரைப்படமே இதுவாகும். இது 2013 இல் வெளியாகியது. எனினும் இதுவரை இன்னமும் எங்கும் திரையிடப்பட வில்லை. இதனைப் பார்க்கம் அரிய வாய்ப்பு அண்மையில் நடைபெற்ற கொழும்பு சர்வதேசத் திரைப்பட விழாவிற்குச் சென்றிருந்த எனக்குக் கிட்டியது.

16 ஆவது ஷங்காய் திரைப்பட விழாவில் (2013) ஆயிரக கணக்கான திரைப்படங்களுள் தங்கக்கோப்பை விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் ஒரேயொரு தமிழ்த் திரைப்படம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் என்ற ரீதியில் நிச்சயமாக நாமும் பெருமைப்படலாம்.

ரொறன்ரோவில் இரு வராங்களுக்கு உட்பட்ட கால எல்லைக்குள் இடம் பெறும் சம்பவங்கள் கூட்டுக்கதைகளின் இணைப்பாக இத்திரைப்படம் திகழ்கிறது. இவைகளுக்கிடையே சகலவற்றையும் உள்ளிழுத்துப் பின்னப்பட்டிருக்கும் பொதுச் சரடு இழையோடுகிறது. அவை ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதைத் தெளிவான திரைக்கதையினூடாக சாத்தியமாக்கியிருப்பது பாராட்டத்தக்கதொரு உத்தியாகும்.




மேலும் ஒவ்வொன்றுக்கும் கவித்துவமான தனித் தலைப் பிட்டிருப்பது பல குறும்படங்களின் கூட்டிணைப்பிலான அனுபவத்தையும் ஒரு சேரத்தருகிறது. இளைஞனான ஞானம் தான் எதிர் கொள்ள நேருகின்ற சகல தோல்விகளுக்கும் அதிருப்திகளுக்கும் எல்லாம் தனது இருண்ட கடந்த காலமே காரணம் என்று நம்புவதுடன் மாத்திரமன்றி அதற்கு இறுதி முடிவெடுக்க வேண்டும் என்று முனைப்புடன் வன்முறையை நாடி அலைகிறான்.

நேர்மையும் கடமையுணர்வுடன் கூடிய விசுவாசமும் கொண்ட கனடிய பொலிஸ்காரரான ஜோன், மனவேதனைக்கும் விரக்திக்கும் உள்ளாகியிருக்கும் இளவயது ஒருபால் உறவினனான ஆதி , தமது ஒரே மகனை யுத்த சூழலிலிருந்து சிறுவயதிலிருந்தே விலக்கி அவனின் பாதுகாப்பிற்காக மனைவியைப் பிரிந்து கனடாவில் மகளுடன் வாழும் இரக்க சுபாவமுடைய சொர்ணம். தமது ஒரே மகனுடைய அகால மரணத்திற்குப் பிறகு வாழ்க்கையில் எதுவித பற்றுமின்றி துன்பத்தில் உழலும் அரியம், முன்னர் போராளியாக இருந்து புதுமண வாழ்வில் இணையும் பொருட்டு திருமணம் செய்யக் கனடா வந்திருக்கும் அபி, சகல சொந்த பந்தங்களையும் இழந்து சூடானிலிருந்து அகதியாக வந்திருக்கும் சூடானிய இளைஞன் இவர்களைச் சுற்றிச் சுழல்வதாக திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. வேறுபட்ட தலைமுறையினராகிய இவர்கள் தமது கடந்த காலங்களிலிருந்து விடுபட முடியாதவர்களாக கடுமையான யதார்த்தங்களை ரொறன்ரோவில் எதிர் கொள்வதே தொடரும் கதையாகும்.

இலங்கைத் தமிழர்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்ட தமிழ்த் திரைப்படங்கள் பலவற்றுக்கும் நெருடலாகவும், யதார்த்தத்தைப் பாதிக்கும் வகையிலும் அமைந்து விடுகின்ற யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் மிகச் சரியான முறையில் கையாளப்பட்டுள்ளது. இத்தனை இயல்பும், எளிமையும் கொண்ட நம்பகத்தன்மையுடன் கூடிய சாதாரணர்களின் திரைப்படமாகத் தரமுயர்த்துகிறது. ஒட்டு மொத்தமாக தமிழ் அடையாளங்களுடன் கூடிய நல்லதொரு திரைப்பட அனுபவத்தை சாத்தியமாக்கி இருக்கும் லெனின் எம்.சிவமும் அரவது குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள்.

உலக குறும்பட வரிசையில்.....

THE BREAD ALLEY (அலியும் ரொட்டித் துண்டும்)


இது சர்வதேப் புகழ் வாய்ந்த ஈரானிய நெறியாளரான அபாஸ் கியாரொஸ்ரமியின் முதலாவது குறும்படமாகும். 1970 ஆம் ஆண்டில் வெளிவந்த இக்குறும்படத்தை அவரே எழுதி நெறியாளுகை செய்துள்ளார். சிறுவர்களுக்கான குறும்படமாக சர்வதேச அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் இக்குறும்படம் ஈட்டியது குறிப்பிடத்தக்கது. கறுப்பு வெள்ளையில் 10நிமிடங்கள், மாத்திரமே நீடிக்கும் இக்குறும்படம் கையில் பாணுடன் வீடு திரும்பும் சிறுவன் வழியில், பசியால் அலைந்து திரியும் இராட்சத நாயொன்றை எதிர்கொள்ள நேரிடும் நெருக்கடி பற்றிக் கூறுவது

வீட்டில் பாண் வாங்கி வருமாறு கூறுகிறார்கள். பாணை வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் சிறுவனை நெருக்கடி சூழ்கிறது. அவன் வீட்டிற்குச் செல்ல வேண்டிய பாதையை இராட்சத நாயொன்று நகரமுடியாதபடி அடைத்துக் கொண்டு தொந்தரவு செய்கிறது.

நாயின் அசாதரண தோற்றத்தினாலும், அதன் குரைப்பினாலும் மிரண்டு போன சிறுவன் சில வழிப்போக்கர்களின் உதவியை நாடியபோதிலும், அவர்கள் எவரும் அவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இப்போது தனித்த நிலையில் பாதையிலும் தனித்து நிற்கிறான். பாணில் ஒரு துண்டைப் பிய்த்து தூரத்தே அதை நோக்கி வீசி எறிகிறான். நாயின் கவனம் எறிந்த துண்டின் மீது திரும்ப அவன் தொடர்ந்து நடக்கிறான்.

எல்லோருக்கும் தெரிந்த அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக்கூட புதிதாகப் புரண்டிப் போட்டு மாயவித்தை காட்டும் படைப்பாற்றல் கைவரப் பெற்றவர் கியாரொஸ்ரமி.

(தொடரும்)



# கிரிக்கெட் ஓ... கிரிக்கெட்...

- காவலூர் ஞானம் -

இன்றைய நாட்களில் கிரிக்கெட் விளையாட்டு என்பது சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை விரும்பும் விளையாட்டாக மாறி வந்திருக்கின்றது. அது மாத்திரமல்ல தொழில் ரீதியாக ஆண்டு முழுவதும் இதை விளையாடி நிறையச் சம்பாதிப்ப வர்களும் அதிகரித்து வருகிறார்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் ஆட்ட அறிமுகங்களின் பின்னர் இந்த விளையாட்டு பல கோடிக் கணக்கானவர்களின் டார்லிங்காக மாறி வருகின்றது . குறிப்பாக , ஐ.பி.எல். என்று அழைக்கப்படும், இந்தியாவின் இருபது ஓவர் ஆட்டம் , உலகின் சிறப்பு ஆட்டக்காரர்கள் ஒன்று கூடும் ஒரு பெரிய களமாக மாறி இருப்பதுடன், கொள்ளை கொள்ளையாக பணம் சம்பாதிக்க , பணம் காய்க்கும் மரங்களாக மாறி இருக்கின்றன .

இந்த விளையாட்டு எங்கே , எப்படித் தோன்றியது ? எந்த விளையாட்டுக்கும் இல்லாத அளவுக்கு மீறிய ஆர்வம் குறிப்பாக ஆசிய நாடுகளில் எப்படி ஆரம்பித்தது ? இந்த விளையாட்டுப் பற்றிய சுவாரஸ்சியமான தகவல்களையும் , அடிப்படை உண்மைகளையும் தொடர்ந்து படியுங்கள்...

கிரிக்கெட்டின் தோற்றுவாய் இங்கிலாந்து என்பதில் சந்தேகமே இல்லை. 16 ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் கிரிக்கெட் விளையாடியதற்கான பதிவுகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன . கிரிக்கெட்டுக்கான விதை போடப்பட்டதும், பெரு விருட்சமாக கிளை விட்டு உலக நாடுகளெங்கும் பரந்து விரிந்ததற்கும் இங்கிலாந்தே காரணம் என்று சொல்லி விடலாம் . இது பாடசாலைகளிலும், விவசாயம் செய்யும் சமூகத்தினராலும் மற்றும் பல இடங்களிலும் விளையாடப் பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது. 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் பிரபுக்கள் இதை ஒரு நல்ல விளையாட்டு என்று பார்த்ததோடு, சூதாட நல்லதொரு வாய்ப்பு என்ற கோணத்திலும் இந்த விளையாட்டை பார்க்கத் தொடங்கினார்கள்.

இதை ஒரு பணம் காய்க்கும் மரமாக, அன்றே பார்க்கத் தொடங்கி விட்டார்கள் . இந்த மண்ணாசையும், பெண்ணாசையும் , பொன்னாசையும் யாரைத்தான் விட்டு வைத்திருக்கின்றது? விளையாட்டு விளையாட்டாக பணத்தையும் சம்பாதித்து விடுவோம் என்ற அடிப்படை ஆசைதான், கிரிக்கெட்டின் வளர்ச்சியின் முதலாம் அத்தியாயம் என்று சொல்லி விடலாம் .

**கைக்குட்டையில் விதிமுறைகள்**

பணம் பெருமளவு கையாளலாம் என்ற நிலையில், இந்த விளையாட்டுக்கு நல்ல விதிமுறைகள் தேவை என்று பிரபுக்கள் கருதியதால், எல்லோரும் ஏற்கும் வகையில், விளையாட்டுக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டன . 1744 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பகால விளையாட்டு விதிமுறைகள், கைகுட்டையிலேயே அச்சிடப் பட்டது என்பது நம்மை ஆச்சரியப்படுத்தும் ஒரு தகவல். (அன்றைய நாட்களில் ஆணாக இருந்தால் என்ன பெண்ணாக இருந்தாலென்ன, தங்கள் கைவசம் ஒரு கைக்குட்டை இல்லாதவர்களைக் காணமுடியாது ).

ஏனவே விதிமுறைகளில் சந்தேகம் வந்தால், சட்டென பொக்கெற்றுக்குள் உள்ள கைக்குட்டையை எடுத்து, விதிமுறைகளை ஒருமுறை சரி பார்த்துக் கொள்ள, இது நல்ல உதவியாக இருந்திருக்கின்றது . இன்றும் இப்படியான விதிமுறைகள் அச்சிடப்பட்ட கைக்குட்டை, லண்டனின் லோர்ட்ஸ் மைதானத்தில் உள்ள எம்.சீ.சீ. கிரிக்கெட் அருங்காட்சியகத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஏனவே இது கற்பனைக் கதையல்ல!

சூதாட்டமே கிரிக்கெட் வளர்ச்சிக்கு முதல் "மைல் கல்" என்றால் நீங்கள் நம்பத் தயாரா? நம்பத்தான் வேண்டும் ! சூதாட்டம்தான் முதன் முதலில் ஆதரவாளர்களை இந்த விளையாட்டுக்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றது. சூதாடுபவர்கள் தங்கள் பந்தயப் பணம் பத்திரமாக இருப்பதற்காக தங்கள் சொந்த குழுவை ஏற்பாடு செய்து கொண்டனர்.

1805 தொடக்கம், ஆண்டுக்கு ஆண்டு ஒரு கிரிக்கெட் மோதல் இடம்பெறவே செய்தது. இந்த மோதல்களில் மிக மோசமாக , ஆபத்தான முறையில், ஒரு இளம் பிரபு பந்து வீசினார் என்று சொல்லப்பட்டாலும், அதற்கான பதிவுகள் இருக்கவில்லை . பன்னாட்டு மோதல் என்று பார்த்தோமானால், 1877இல் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணியுடன் மோதியதைத்தான் சொல்ல வேண்டும். மெல்பேனில் நடந்த இந்த முதல் மோதலில், அவுஸ்திரேலிய அணிதான் வெற்றிவாகை சூடியது . ஆனால் இது ஒரு டெஸ்ட் போட்டி என்று சொல்லப்பட்டு, அது 5 நாள் டெஸ்ட் தொடர் என்று வரையறுக்கப்பட்டு, அந்த ஐந்து நாட்களும் போட்டியைத் தொடர்வது என்பது சோதனைக்குரிய ஒன்றாகவே இருந்துள்ளதாக சொல்கின்றன சரித்திரத் தகவல்கள் !



1882 இல் லண்டன் ஓவல் மைதானத்தில், அவுஸ்திரேலியாவும் - இங்கிலாந்தும் மோதிக் கொண்டபோது , அவுஸ்திரேலிய அணி அடைந்த வெற்றியே, எதிர்காலங்களில் "ஆஷஸ்" Ashes என்று அழைக்கப்படும் இரு நாடுகளுக்கு இடையிலான, வருடாந்த தொடர் மோதல்களுக்கு வித்தாக அமைந்தது. Aborgines என்று அழைக்கப்படும் அவுஸ்திரேலிய ஆதிவாசிகள், 1866 டிசம்பரில் இங்கிலாந்துக்கு வந்து கிரிக்கெட் விளையாடிய படத்தை இங்கே நீங்கள் காணலாம், இந்தப் படம் இங்கிலாந்துக் கிரிக்கெட் கழகத்தின் அருங்காட்சியகத்தில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது

1882 இல் நடந்த போட்டி முடிவில், "மரணம் அடைந்தது இங்கிலாந்து கிரிக்கெட். உடல் எரிக்கப்பட்டு, சாம்பல் அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது" என்று இங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இதுவே நாளடைவில் சாம்பல் என்று பொருள்படும் Ashes என்று இன்றுவரையில் அழைக்கப் பட்டு வருகின்றது .இந்தத் தகவல் நமக்குத் தெரிய வரும்போது, அட இதற்காகவா இந்தப் பெயர் என்று ஆச்சரியப்படுகிறோம் .

**ஆட்டத்துக்குள் ஆட்டம்**

மகாபாரத்தில் சகுனி ஆடிய ஆட்டம் , அந்தக் காப்பியத்தோடு கரைந்து போய்விடவில்லைப் போலும். இந்தப் பூமி கணினி உலகமாக பரிணமித்தும் , சூதாட்டம் பல வடிவங்களில் , இன்னமும் பல்லிளித்துக் கொண்டே இருப்பதை நாம் காணலாம். சூதாட்டமே கிரிக்கெட் வளர்ச்சிக்கு முதல் "மைல் கல்" என்றால் நீங்கள் நம்பத் தயாரா ?

நம்பத்தான் வேண்டும் ! சூதாட்டம்தான் முதன் முதலில் ஆதரவாளர்களை இந்த விளையாட்டுக்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றது. சூதாடுபவர்கள் தங்கள் பந்தயப் பணம் பத்திரமாக இருப்பதற்காக தங்கள் சொந்த குழுவை ஏற்பாடு செய்து கொண்டனர். இந்த குழுக்கள் " கவுண்டி குழுக்கள்" County Groups என்று அழைக்கப்பட்டன. இவை 1660 ஆம் ஆண்டுக்குப் பிறகு உருவாக்கப் பட்டன. கவுண்டி பெயர்களை பயன்படுத்தி நடந்த முதல் விளையாட்டு 1709 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த ஆண்டுக்கு முன்னரே இப்படிப்பட்ட ஆட்டங்கள் நடந்திருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. 1697 ஆம் ஆண்டு நடந்த போட்டி சசெக்சுக்கும் வேறொரு மாவட்டத்துக்கும் இடையே நடந்திருக்கலாம். இந்தத் தகவல்கள் நமக்கு தெரியவரும் போது , ஓடும் குதிரைகளில் மட்டும்தான் பந்தயப் பணம் கட்டினார்கள் என்றில்லாமல் , ஆடும் விளையாட்டு வீரர்கள் மீதும் பணம் தொன்று தொட்டே கட்டப்பட்டு வந்திருக்கிறது. விளையாட்டு என்பதை பொழுதுபோக்கு எனபதை மட்டுமே குறியாகக் கொள்ளாது, எப்படிப் பணம் புரட்டலாம் என்பதில், அப்பொழுது இருந்தவர்களே தீவிரமாக இருந்திருப்பதை , நம்மால் இப்பொழுது அறிய முடிகிறது. ஆட்டங்களுக்குள் நடந்த ஆட்டம் என்றே இந்தப் பந்தயங்களைச் சொல்லத் தோன்றுகின்றது

( வளரும் )





பாபநாசம், ஜில்லா படங்களில் நடித்து தனது அழகான முகம், கட்டுடலுலால் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தவர் நிவேதா தாமஸ்.

தெலுங்கு, கன்னடப் படங்களில் நடித்து வரும் அவர்ன. அண்மையில் வெளியிட்ட படம் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. காரணம் அவரின் முகவசீகரம் குறைந்திருந்தது.

இதைப் பார்த்த ரசிகர்கள் முகத்தை மாற்ற அறுவைச் சிகிச்சை வேண்டாம் எனப் பதிவிட்டனர். ஆனால் புகைப்பட நிபுணர்களோ அது மேக்கப் இல்லாத படம் என்பதாலேயே அவ்வாறு உள்ளது எனக் கூறியுள்ளனர்.

'மேயாத மான்'படம் மூலம் அறிமுகமானவர் பிரியா பவானி சங்கர். முதல் படமே அவருக்கு பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

விஜய் சேதுபதி நடித்து வரும் 'ஜூங்கா' படத்தில் முக்கிய பாத்திரத்துக்கு அவரை படக்குழு ஒப்பந்தம் செய்துள்ளது. தொடர்ந்து பாண்டியராஜ் இயக்கத்தில் கார்த்தி நடிக்கும் படத்தின் நாயகியாகவும் பிரியா பவானி ஒப்பந்தமாகியுள்ளார்.



அறம் படத்தில் அரசியலை நக்கலடிக்கும் கதையில் நடித்துள்ளார் நயன்தாரா. வரும் 10 ஆம் திகதி திரைக்கு வரும் இந்தக் குடிதண்ணீர் பிரச்சினையை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது.

# ஏன் இந்தக் குற்றச்சாட்டு?



இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான போட்டி நடைபெறும் கரபாவோ கிண்ணத் தொடரில் சென்ற வாரம் நடைபெற்ற மன்செஸ்ரர் சிற்றி வோல்வெர்ஹம்ரன் அணிகளுக்கிடையிலான போட்டியில் நிர்ணயிக்கப் பட்ட நேரத்தில் இரண்டு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை. இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்றியில் மன்செஸ்ரர் சிற்றி 4 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தற்போது நடைபெற்று வரும் இன்னொரு தொடரான இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் இதுவரை 9 போட்டிகளில் விளையாடி 32 கோல்கள் அடித்து முன்னிலை வகிக்கும் மன்செஸ்ரர் சிற்றி பிரபலமில்லாத வோல்வெர்ஹம்ரன் அணியுடன் கோல் எதனையும் பெறாமல் வென்றது ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்தப் போட்டியில் மன்செஸ்ரர் சிற்றி தோற்காதது முகாமையாளரான பெப் கார்டியோலாவுக்கும் சற்று மன ஆறுதலைத் தந்தாலும் வீரர்கள் கோல் எதுவும் அடியாதது அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தது. ஆனாலும் இதற்கு அணி வீரர்களைக் குற்றஞ்சாட்டாமல் இத்தொடரில் பயன்படுத்தப்படும் பந்தை அவர் குறை கூறியுள்ளார். இது குறித்து கார்டியோலா ' இது ஒரு நல்ல பந்தல்ல. இதுபோன்ற பந்துகளில் விளையாடி கோல்கள் பெறுவதென்பது சாத்தியமில்லை. எனவே உயர்மட்ட ரீதியில் நடைபெறும் போட்டிகளில் இத்தகைய பந்துகளைப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் போட்டியில் எமது அணி வென்றதனால் இதனை நான் கூற முடியும் ' எனத் தெரிவித்துள்ளார். கரபாவோ தொடரில் பயன்படுத்தப்படும் பந்து MITRE DELRA ஆகும். இத்தொடர் காலிறுதிச் சுற்றை நெருங்கியுள்ள நிலையில் இதுவரையான போட்டிகளிலும் இவ்வகையான பந்துகளே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. எனவே முன்னைய வெற்றிகளின்பொழுது பந்து மீது குற்றச்சாட்டை முன்வைக்காத கார்டியோலா தற்போது மட்டும் பந்தைக் குற்றஞ்சாட்டுவது சரிதானா என்ற கேள்வியையும் எழுப்பி உள்ளது.

ஆனாலும் இத்தகைய குற்றச்சாட்டுகள் போட்டித் தொடரில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடும் என்பதை உணர்ந்த கரபோவா நிர்வாகம் கார்டியோலா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியதன் பின்னர் உடனடியாகவே அது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் 'கரபாவோ மற்றும் செகாறேட் தொடர்களில் இத்தகைய பந்துகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. "பிபா"வின் உதைபந்துத் தர நிர்ணய விதிகளுக்கமையவே இந்தப் பந்தும் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

# அதிகாரப் பகிர்வு

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான டரன் லீமன் தனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டு சில தினங்களுக்கு முன்னர் டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டும் பயிற்சியாளராக இருக்க விரும்புவதாகவும் மட்டுப்படுத்தப் பட்ட போட்டிகளுக்குப் பயிற்சியாளராக இருக்க விரும்பவில்லை எனவும் கூறியிருந்தார். அவரது உடல்நிலைக்கும் அப்பால் தற்போது அதிகரித்து வரும் சர்வதேச போட்டிகளினாலும் முக்கியத்துவம் வாய்ந்த தொடர்களுக்கு அளிக்கும் முன்னுரிமையாலும் தனித்தனியே இரண்டு பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியத்தையே லீமனின் கருத்து வெளிப்படுத்துவதாக உள்ளது.





இதற்கு உதாரணமாக லீமன் அவுஸ்ரேலியப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட போதிலும் கடந்த ஒரு வருடகாலத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் அவுஸ்ரேலிய அணி இரண்டு பயிற்சியாளர்களுடன் களமிறங்கவேண்டிய நேவை ஏற்பட்டிருந்தது. இந்த வருட பெப்ரவரியில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இருபதுக்கிருபது தொடரில் அவுஸ்ரேலியா விளையாடிய அதேசமயம் மறுதினமே இந்தியாவுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் போட்டிகளுக்கு லீமனும் இருபதுக்கிருபது தொடருக்கு ஜஸ்ரின் லாங்கரும் அவருக்கு உதவியாளர்களாக றிக்கி பொண்டிங்கும் ஜேசன் கிலஸ்பியும் நியமிக்கப்பட்டார்கள்.

அதுபோலவே சென்ற மாதம் நடந்து முடிந்த இந்தியாவுக்கெதிரான ஒருநாள் மற்றும் இருபதுக்கிருபது தொடரிலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரைக் கருத்திற்கொண்டு லீமன் விலக அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளரான டேவிட் சாகரே பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றிருந்தார். எனவே மேற்கூறிய இரண்டு சந்தர்ப்பங்களும் அவுஸ்ரேலிய அணிக்கு இரண்டு பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியத்தை ஒருவகையில் உணர்த்துவதாகவே உள்ளது. இதுவரை காலமும் முக்கியமான தொடர்களைக் கருத்திற்கொண்டு முக்கிய வீரர்களுக்குத்தான் ஓய்வு வழங்கப்பட்டு வந்ததே தவிர பயிற்சியாளர்களின் தரப்பில் இருந்து இந்தப்பிரச்சினையை ஒருவரும் அணுகியதாகத் தெரியவில்லை. இத்தகைய இரண்டு பயிற்சியாளர் திட்டத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இங்கிலாந்தின் முன்னாள் பயிற்சியாளரான அண்டி பிளவரே. எனவே இரண்டு பயிற்சியாளர்கள் திட்டம் அவுஸ்ரேலிய அணியில் அறிமுகப்படுத்தப்பட்டால் போதிய ஓய்வு கிடைத்து பயிற்சியாளர்களும் புத்தூக்கத்துடன் செயற்படுவதற்கு வாய்ப்பாக அமையும் எனலாம்.

# இடம் மாறுமா இறுதிப்போட்டி?

சென்ற மாதம் ஓக்லாண்டில் நடைபெற்ற ஐ.சி.சி. கூட்டத்தில் சிம்பாவே தவிர்ந்த 9 நாடுகள் பங்குபற்றும் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி டெஸ்ட் விளையாடும் 9 நாடுகளும் சொந்தமண்ணில் 3 டெஸ்ட் தொடர்களையும் அயல்நாட்டில் 3 டெஸ்ட் தொடர்களையும் 2 வருடங்களுக்குள் விளையாட வேண்டும். 2019 உலகக் கிண்ணப் போட்டிகள் முடிந்த பின்னர் இந்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் ஆரம்பமாகி 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இதன் இறுதிப்போட்டியை உலகக் கிண்ண இறுதிப்போட்டி போன்று பிரமாண்டமாக நடத்த ஐ.சி.சி. உத்தேசித்துள்ளது. ஆனாலும் இந்தத் தொடரை எவ்வாறு வடிவமைப்பது மற்றும் போட்டி அட்டவணை தயாரிப்பது தொடர்பில் இன்னமும் இறுதி செய்யப்படவில்லையாயினும் இறுதிப்போட்டி இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் எனவும் அறிவித்திருந்தது.

டெஸ்ட் போட்டிகளின் எதிர்காலம் குறித்த சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டுள்ள நிலையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் அதன் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்தியுள்ளது. அதனால் இந்த விடயத்தில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஒட்டுமொத்த நாடுகளும் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்திருந்தன. ஆனாலும் இந்தியா மட்டும் ஒரு விடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளது. அதுதான், இறுதிப் போட்டியை முற்கூட்டியே இங்கிலாந்தில் நடத்த எடுத்த முடிவுக்கு எதிராக. ஏனென்றால் இரண்டு ஆசிய அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவை இங்கிலாந்தில் விளையாடுவது என்பது பொருத்தமில்லாத விடயம் என்பது அவர்களது வாதம். எனவே அவர்களது கருத்தில் நியாயம் இருப்பதாலும் ஐ.சி.சியில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செல்வாக்கு அதிகம் என்பதாலும் இறுதிப்போட்டி நடைபெறும் மைதானம் தொடர்பான முடிவு மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்பிருப்பதாகவே கருதப்படுகின்றது.

தொகுப்பு :- சி.விமலன்





இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 01.11.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.